# வாக்குச் சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி






# தேர்தல் பணி

- தேர்தல், ஜனநாயகத்தின் மிக முக்கியமான அம்சமாகும். தேர்தல் பணியினை மேற்கொள்வது ஒரு புனிதமான கடமை. எனவே வாக்குச் சாவடி அலுவலர்கள் தங்கள் கடமையை நடுநிலையுடனும் சிறப்புடனும் செய்வது மிக அவசியமாகும்.

- *“வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு”*

- எனும் வள்ளுவனின் வாக்கிற்கு ஏற்ப அஞ்சாமை, குடிப் பிறப்பு, காக்கும் திறன், கற்றறிந்த அறிவு, முயற்சி ஆகிய ஐந்திறனையும் கொண்டு நீங்கள் தேர்தல் பணியினை செவ்வனே செய்வது இன்றியமையாதது ஆகும்.

- *”சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கு அணி”*

- தன்னை சமனாகச் செய்து கொண்டு, பொருளை சீர் தூக்கிக்காட்டும் துலாக்கோல் போல் அமைவது சான்றோர்க்கு அழகாகும்.

- இதனை மனதில் கொண்டு, நீங்கள் தேர்தல் பணியில் ஈடுபட வேண்டும்.

## தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்கள் மீது இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆளுமை...

- 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 26ன் கீழ் நீங்கள் நியமனம் செய்யப் பட்டுள்ளீர்கள்.
- தேர்தல் பணி இன்றியமையாத ஒன்றாகும். எனவே எந்த அலுவலரும் இதனை மறுக்கவோ அல்லது உதாசீனப்படுத்தவோ முடியாது.

# தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்கள் மீது இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆளுமை.......

- 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 28A-ன் கீழ், தேர்தல் பணியில் ஈடுபட்டு இருக்கும் அனைத்து அலுவலர்களும், இந்திய தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு மற்றும் ஆளுமையின் கீழ் வருவர்.
- 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 134-ன் கீழ், தேர்தல் பணியில் ஈடுபட்டு இருக்கும் அலுவலர்கள் தவறு ஏதேனும் செய்தாலோ, தங்கள் பணியினை செய்யத் தவறினாலோ அவர்கள் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்ததாக கருதப்படும்.

# வாக்குச் சாவடி தலைமை அலுவலரின் பணிகளும் பொறுப்புகளும்...

- வாக்குச் சாவடியில் நல்ல முறையில் வாக்குப் பதிவு நடைபெற, தலைமை அலுவலரின் பணி மிக முக்கியமானதாகும்.
- வாக்குச் சாவடியில் நடக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த, சட்டப்படி முழுமையான அதிகாரம் அவருக்கு கொடுக்கப் பட்டுள்ளது.
- வாக்குச் சாவடியில், நியாயமான மற்றும் சுதந்திரமான வாக்குப் பதிவு நடைபெற செய்வதே, தலைமை அலுவலர் மற்றும் பிற வாக்குச் சாவடி அலுவலர்களின் தலையாய கடமையாகும்

# வாக்குச் சாவடி தலைமை அலுவலரின் பணிகளும் பொறுப்புகளும்......

- தேர்தல் சம்மந்தப்பட்ட அனைத்து விதிகள், வழிமுறைகள் மற்றும் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை நீங்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும்.
- இதற்கென தயாரிக்கப்பட்டுள்ள *வாக்குச் சாவடி தலைமை அலுவலர்களுக்கான கையேட்டினை* நன்றாக படித்துக் கொள்ளுங்கள்.
- *பின்னர் பிறப்பிக்கப்பட்டுள்ள சில உத்தரவுகளும், இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.*

# பல கட்டங்களில் வாக்குச் சாவடி முதன்மை அலுவலர் ஆற்ற வேண்டிய பணிகள்

- நியமனம் செய்யப்பட்ட தேதியில்
- வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு ஒரு நாள் முன்னர்
- வாக்குப் பதிவு அன்று
- வாக்குப் பதிவு துவங்குவதற்கு சற்று முன்னர்
- வாக்குப் பதிவின் பொழுது
- வாக்குப் பதிவு முடிவுற்ற பின்னர்

# நியமனம் செய்யப்பட்ட தேதியில்

- நியமன உத்தரவைப் பெற்றவுடன், புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை உங்களிடம் உள்ளதா என சரிபார்த்துக் கொள்ளுங்கள்
- அனைத்துப் பயிற்சி வகுப்புகளிலும் கண்டிப்பாக கலந்து கொள்ளுங்கள்
- உங்கள் கடந்த கால தேர்தல் அனுபவங்களையோ, ஞாபகங்களையோ முழுமையாக நம்பி விடாதீர்கள். அவை உங்களை ஏமாற்றக் கூடும்

## பயிற்சி வகுப்புகளை ஈடுபாட்டுடன் கவனியுங்கள்……

- வாக்குப் பதிவு இயந்திரங்களை (EVM) நீங்களும், வாக்குப் பதிவு அதிகாரியும் இயக்கிப் பார்ப்பது மிக அவசியம். மற்றவர்கள் இயக்குவதை பார்ப்பது வாக்குப் பதிவு அன்று உங்களுக்கு உதவாது.
- பச்சைத் தாள் முத்திரை (Green paper seal), சிறப்பு அட்டை (Special tag), ஒட்டுத் தாள் (strip seal) மற்றும் முகவரி அட்டை (Address tag) ஆகியவற்றை பரிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.

# பயிற்சி.....

- பதிவான மொத்த ஓட்டுக்களின் கணக்கினையும், காகித முத்திரையின் கணக்கினையும், மாதிரிப் படிவம் 17C- ல் தயார் செய்யுங்கள்.

- வாக்குப் பதிவு இயந்திரங்களை (EVM) திறம்பட இயக்குவது, பச்சைத் தாள் முத்திரையைப் பொருத்துவது, சிறப்பு அட்டை (Special tag), ஓட்டுத் தாள் தாள் (strip seal) மற்றும் பிற முத்திரைகளை பொருத்துவதை பயிற்சி வகுப்புகளில் சரியான முறையில் நீங்கள் கற்றுக் கொள்ளவேண்டும்.

# பயிற்சி வகுப்புகளை ஈடுபாட்டுடன் கவனியுங்கள்....

- பயிற்சி வகுப்புகளை லேசாக எடுத்துக் கொள்ளாதீர்கள்
- நீங்கள் முன்னரே தேர்தல் பணியில் ஈடுபட்டு இருந்தாலும், அனைத்து பயிற்சி வகுப்புகளிலும் கலந்து கொள்ள வேண்டும்.
- தேர்தல் சம்பந்தப்பட்ட விதிகள் மற்றும் நடைமுறைகளில் அவ்வப்பொழுது திருத்தம் செய்யப்படுகிறது. எனவே, சமீபத்திய சட்டம், விதிகள், உத்தரவுகள் ஆகியவற்றை நீங்கள் தெரிந்து வைத்திருப்பது மிக முக்கியமானதாகும்.
- சட்டம் மற்றும் விதிகளைப் பற்றிய அறியாமையை ஒரு சாக்காக நீங்கள் கூறமுடியாது.

# முக்கியமான சட்டங்கள் மற்றும் விதிகளை கவனமுடன் படித்துக் கொள்ளுங்கள்

- வாக்குச்சாவடி முதன்மை அலுவலருக்கான கையேடு இணைப்பு Iல் உள்ள 1950 மற்றும் 1951–ஆம் ஆண்டுகளின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டங்களின் உரிய சட்டப் பிரிவுகளையும், வாக்குச்சாவடி முதன்மை அலுவலருக்கான கையேடு இணைப்பு IIல் உள்ள 1961 ஆம் ஆண்டின் தேர்தல் நடைமுறைக்குரிய சட்டங்களையும் கவனமாக படியுங்கள்.
- உங்களுக்கு சந்தேகம் ஏதும் இருந்தால், தேர்தல் நடத்தும் அதிகாரியை அணுகி தெளிவு பெறுங்கள்.

# வாக்குச் சாவடி அலுவலர்களுக்கான பயிற்சியின் முக்கிய அம்சங்கள்

- மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தை இயக்கும் முறை ,வாக்குப் பதிவு இயந்திரத்தின் கையேட்டினை நன்றாக படித்து, அதனை சரியாக கையாளவும் உள்ள வாய்ப்பினை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- சட்டப்படி ஆற்ற வேண்டிய கடமைகள், வாக்குப் பதிவு நடைபெற வேண்டிய வழிமுறைகள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல், வாக்குச் சாவடி தலைமை அலுவலர்களுக்கான கையேடு மற்றும் கடைசி நிமிடம் வரை உங்களுக்கு கொடுக்கப்படும் உத்தரவுகளை கவனமாக படியுங்கள்.
- வாக்குச் சாவடி தலைமை அலுவலர்களுக்கான கையேடு <u>இணைப்பு V</u> - ல் கொடுக்கப்பட்டுள்ள வாக்குப் பதிவுப் பொருட்களும் அவற்றின் உபயோகமும்.
- வாக்குப் பதிவன்று, அலுவலர் அல்லாத பிற நபர்களின் நடவடிக்கைகளை ஆளும் விதிகள் மற்றும் அவ்விதிகளை நடைமுறைப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கை.

# வாக்குப் பதிவு இயந்திரம்……

- வாக்குப் பதிவு இயந்திரத்தில் *இரண்டு கருவிகள் உள்ளன, கட்டுப்பாட்டு கருவி (Control Unit) மற்றும் வாக்குப் பதிவு கருவி (Ballot Unit)* இவை இரண்டும் ஒரு கேபிள் மூலமாக இணைக்கப்பட்டு இருக்கும்.
- ஒரு வாக்குப் பதிவு கருவியில் பதினாறு (16) வேட்பாளர்களின் பெயர்களை பதிவு செய்யலாம்.
- வாக்குப் பதிவு கருவியில் உள்ள வாக்குப் பதிவு தாளில் வேட்பாளர்களுடைய வரிசை எண், பெயர், சின்னம் ஆகியவை குறிக்கப்பட்டு இருக்கும்.


# Components of EVM

# in Pre 2006 and

# Post 2006 Models


# Components of EVM – PRE 2006

**Interconnecting Cable**



**Control Unit** **Balloting Unit**

# EVM – Components – POST 2006



# Carrying Cases pre 2006

Carrying Case - Control Unit

- The Control Unit and Balloting Unit are packed separately in special carrying cases



Carrying Case - Balloting Unit

# EVM – Carrying Cases post 2006

**Carrying Case - Control Unit**




**Carrying Case - Balloting Unit**

**The Control Unit and Balloting Unit are packed separately in special carrying cases**

# Opening of Carrying Case – Balloting Unit
# Details of latches pre 2006



**Case Closed**




**Latches**

# Opening of Carrying Case – Balloting Unit pre 2006



1. Pull and push upwards simultaneously to release



2. Lift to open



3. Open Case

# Opening of Carrying Case – Control Unit
# Details of latches pre 2006




**Case Closed**




**Latches**

# Opening of Carrying Case – Control Unit pre 2006



1. **Pull and push upwards simultaneously to release**



2. **Lift to open**




3. **Open Case**

# EVM Carrying Cases/Opening post 2006

Carrying Case - Balloting Unit – CENTRE LATCH


To Open the Carrying case, First lift the CENTRE LATCH and then push back the SIDE LATCHES and lift the carrying case top cover



Opening the carrying case of Control Unit is similar

Carrying Case - Balloting Unit – SIDE LATCHES

# Balloting Unit –Details pre 2006




# Balloting Unit pre 2006 Opening of Door Connector Box



**Lift to Open**

# Balloting Unit pre 2006
# Rear View




# Balloting Unit - Opening of Cover pre 2006

1




2



Latch

3




4



**Pull the latches**

**Lift the cover**


# Balloting Unit- Internal parts pre 2006




# Balloting Unit pre 2006
# Opening of the Ballot Paper Screen



**Latch**



**Press both Latches and push**





**Screen Open**

# EVM – Balloting Unit post 2006


This is the unit the voter operates to exercise his / her franchise

The Interconnecting cable is permanently attached to the Balloting Unit




Front View

# EVM – Balloting Unit – Details post 2006



# EVM – Balloting Unit – Rear View post 2006


## Opening of Connector Box Door




Connector Box door


Lift to Open

# EVM – Balloting Unit – Parts in Rear View post 2006



# EVM – Balloting Unit – Opening of Front Door Cover post 2006







Push the Latch backwards

Lift the Cover

# EVM – Balloting Unit – Internal Parts post 2006





# EVM – Balloting Unit post 2006


## Opening of the Ballot Paper Screen

Sealing points

Space to fix Ballot Paper









Latch

Press down both the latches simultaneously and push

Screen Open

# EVM – Balloting Unit post 2006




Ballot Paper


# Control Unit pre 2006

ON Lamp

Display Section

Ballot Section

Total Button




Busy Lamp


Candidate Set Section

Result Section

Ballot Button

# Control Unit pre 2006
# Opening of Bottom Compartment

**Bottom Compartment Cover**



**Press Latch to release**




**Pull to open Cover**

# Control Unit – PRE 2006
# View of Bottom Compartment

Power Switch

Connector for
Interconnecting Cable

Bottom Compartment
Cover



Connector for
Auxiliary Unit

# Control Unit PRE 2006 Display Section

4-Digit
Display Panel


ON Lamp




Busy Lamp


2-Digit
Display Panel

# Control Unit PRE 2006 Candidate Set Section



# Control Unit PRE 2006
# Result Section-

**Close button**





**Provision for thread seal**

**Inner compartment door**

**Result I button**

**Clear button**




**Result II button**


**Inner latches**

**Frames for Paper seal**

# EVM – Control Unit – Front View post 2006

**Power ON Lamp (Green)**

**Busy Lamp (Red)**




**Display Section**

**Candidate Set Section**


**Result Section**

**Ballot Section**


# EVM – Control Unit post 2006

## Opening of Bottom Compartment

**Press Latch to release**



**Bottom Compartment Cover**





**Pull to open cover**

# EVM – Control Unit – Bottom Compartment post 2006

Power Switch

Socket for Interconnecting Cable of Balloting Unit





Socket for connecting Data Interface.
At present this HAS NO USE.
DO NOT USE THIS SOCKET

# EVM – Control Unit – Display Section post 2006


Power ON Lamp (Green)

Busy Lamp (Red)




Dual Line Digital Display Panel

# EVM – Control Unit – Candidate Set Section post 2006



# EVM – Control Unit – Result Section – post 2006


Close Button


Result Section Outer Door

Result Button

Clear Button

Frame for Paper Seals




Holes to pass thread for sealing

Inner Compartment Door

Print Button

Inner Latches

Outer Door

# வாக்குப் பதிவு இயந்திரம்......

- ஒவ்வொரு வேட்பாளரின் *பெயருக்கு எதிரே உள்ள நீல நிற பட்டனை அழுத்தி அந்த வேட்பாளருக்கு வாக்காளர் தனது வாக்கினை அளிக்கலாம்.*
- நீல நிற பட்டனுக்கு அருகே ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒரு சிறிய விளக்கு பொருத்தப் பட்டுள்ளது.
- வாக்களிக்கும்போது, *இவ்விளக்கு சிவப்பாக ஒளிரும். கூடவே "பீப்" எனும் சத்தம் கேட்கும்.*


# வாக்குப் பதிவு கருவி (Ballot Unit) பகுதிகள்




This is the unit the voter operates to exercise his / her franchise

The Interconnecting cable is permanently attached to the Balloting Unit

# வாக்குப் பதிவு கருவி (Ballot Unit) பகுதிகள்




# வாக்குப் பதிவு இயந்திரம்....

- கட்டுப் பாட்டு கருவியின் மேற்பகுதியில், போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, பதியப்பட்ட மொத்த வாக்குகள், ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற வாக்குகள் போன்ற விவரங்களை காட்டும் பகுதி ***(Display section)*** உள்ளது.

- இக்கருவியை இயக்கும் பேட்டரிக்கு **Display section** - ன் கீழ் ஒரு தனி அறை உள்ளது.

# வாக்குப் பதிவு இயந்திரத்தின் பகுதிகள்– விவரங்களை காட்டும் பகுதி




Busy lamp glows ‘RED” when the ‘Ballot’ button is pressed by polling officer to enable the voter to cast vote. It goes off when the voter has cast his vote.

When no button is operated for 10-15 minutes, the CU goes to power save mode. Indicated by flickering of green ‘ON’ lamp in every 5 seconds.

**Busy Lamp (Red)**


**Dual Line Digital Display Panel**

**Power ON Lamp (Green)**

# வாக்குப் பதிவு இயந்திரம்....

- வாக்குப் பதிவு இயந்திரத்தின் வலது பக்கத்தில் உள்ள அறையில், போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இயந்திரத்தை அமைத்துக் கொள்ள ஒரு பட்டன் உள்ளது.
- இந்த பட்டன் *'Cand Set'* பட்டன் என அழைக்கப்படுகின்றது. கட்டுப்பாட்டு கருவியின் இவ்விரண்டு பகுதிகளும் *'Cand Set' பகுதி* என அழைக்கப் படுகிறது.
- இந்த 'Cand Set' பகுதியின் கீழ் கட்டுப்பாட்டு கருவியின் முடிவுகள் பிரிவு *(Result Section)* உள்ளது.

# வாக்குப் பதிவு இயந்திரத்தின் பகுதிகள்



# வாக்குப் பதிவு இயந்திரம்...


- *முடிவுகள் பிரிவு (Result Section)* பகுதியில்

(i) இடது பக்கத்தில் வாக்குப் பதிவை முடிக்க Close பட்டனும்

(ii) நடுப் பகுதியில் தேர்தல் முடிவுகளை தெரிந்து கொள்ளும் பட்டனும்

(iii) வலது பக்கத்தில் தேவை முடிந்த பின்னர் விவரங்களை அழிப்பதற்கான 'Clear' பட்டனும் உள்ளன.

# வாக்குப் பதிவு இயந்திரத்தின் பகுதிகள் - முடிவுகள் பிரிவு



# வாக்குப் பதிவு இயந்திரம்…

- கட்டுப்பாட்டு அறையின் கீழ்ப் பகுதியில் இரண்டு பட்டன்கள் உள்ளன. ஒன்று **‘Ballot’** எனவும் மற்றொன்று **‘Total’** எனவும் குறிப்பிடப் பட்டிருக்கும்.
- **Ballot** பட்டனை அழுத்தியவுடன் வாக்குப் பதிவு கருவி, வாக்குகளை பதிய தயாராகும். **‘Total’** பட்டனை அழுத்தினால், அது வரை பதிந்த மொத்த வாக்குகளின் விவரத்தை அறியலாம். வேட்பாளர்கள் வாரியான பதிந்த வாக்குகளின் விவரத்தை அறிய இயலாது.
- கட்டுப்பாட்டு கருவியில் உள்ள இந்த பிரிவு ***‘Ballot Section’*** என அழைக்கப்படுகிறது.

# மின்னணு வாக்கு இயந்திரத்தின் முக்கிய அம்சங்கள்

- தனிப்பட்ட வரிசை எண் – ஒவ்வொரு கட்டுப்பாட்டு கருவிக்கும் தனிப்பட்ட வரிசை எண் உள்ளது. அவை Metal Strip குறியீடாகவும், Bar Code குறியீடாகவும், கட்டுப்பாட்டு கருவியின் பின்புறம் பதிக்கப்பட்டு இருக்கும்.

- சரியான கால கடிகாரம்– கட்டுப்பாட்டு கருவியின் power பட்டனை ஆன் செய்தவுடன், சரியான இன்றைய தேதி மற்றும் நேரம் கண்காணிப்புத் திரைப் பகுதியில் தெரியும். கடிகாரம் சரியாக வேலை செய்யவில்லையெனில் 'CLOCK ERROR' என்று காண்பிக்கும். ஒவ்வொரு வாக்காளர் பதிவு செய்யும் வாக்கின் நேரத்தை அக்காடிகாரம் கருவியில் பதிவு செய்யும்.

# மின்னணு வாக்கு இயந்திரத்தின் முக்கிய அம்சங்கள்

- Status of Battery Power- Battery power status is displayed. If required it also displays ‘CHANGE BATTERY’.
- Power Save Mode- The unit goes into power save mode in the idle state, thus enhancing the life of power pack.
- Print- The result of poll data i.e. in which time votes are cast can be printed, if required.
- Braille- Molding of Braille on Ballot Unit for visually challenged voters.

# மின்னணு வாக்கு இயந்திரம் – செய்யக்கூடாதவை

| | |
|---|---|
| Don't | Exert undue pressure on latches, hinges etc. |
| Don't | Keep EVM near heater or other hot objects |
| Don't | Allow molten lac/sealing wax to fall on the EVM while sealing |
| Don't | Force open the covers or doors of various sections |
| Don't | Remove power pack from the Control Unit used for poll |
| Don't | Force the connector fixed at the end of the Interconnecting cable into the connector of Control Unit in the reverse direction |
| Don't | Pull the Interconnecting cable while disconnecting it from the Control Unit without pressing the spring type clips on the hood of the connector |

# சக வாக்குச் சாவடி அலுவலர்கள், வாக்குச் சாவடியின் இருப்பிடம் மற்றும் வழித் தடம் பற்றிய தகவல்

- கடைசி பயிற்சி (தேர்தல் நடக்கு ஒரு நாளுக்குமுன் ) வகுப்பின்பொழுது உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியின் விவரம் தெரிய வரும். அவ்வாக்குச் சாவடி இருக்கும் சட்டமன்ற தொகுதி, இடம், அங்கு சென்றடைவதற்கான வழித்தடம் மற்றும் சக வாக்குச் சாவடி அலுவலர்களின் தொலைபேசி எண் ஆகியவற்றை *தகவல் தொடர்பு திட்டத்தில் இருந்து* நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

- சக வாக்குச் சாவடி அலுவலர்களின் பெயர், அலுவலக மற்றும் வீட்டு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை தெரிந்து கொள்ளவேண்டும். உங்களுடைய அலுவலக மற்றும் வீட்டு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை அவர்களிடம் கொடுக்க வேண்டும்.

# தகவல் தொடர்பு திட்டம்

- வாக்குச் சாவடி அளவிலான தகவல் தொடர்பு திட்டத்தில் வாக்குச் சாவடி தலைமை அலுவலர், வாக்குச் சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer), மண்டல அலுவலர் மற்றும் நடுநிலையான நம்பத் தகுந்த உள்ளூர் நபர் அல்லது 'runner' (செல்போன் வசதியில்லாத கிராமங்களில் 'runner' இருப்பது மிக அவசியம்) ஆகியோரின் தொலைபேசி/செல்போன் எண்கள் கொடுக்கப்படும்.
- உங்களுக்கு தொடர்புடைய இத்தகவல் தொடர்பு திட்டத்தின் பகுதியை கண்டிப்பாக பெற்றுக் கொள்ளுங்கள்.

# தகவல் தொடர்பு திட்டம்...

- வாக்குப் பதிவு இயந்திரம் பழுதடைந்து விட்டாலோ, அச்சுறுத்தல், ஆள்மாறாட்டம் ஆகியவை முயற்சிக்கப்பட்டாலோ இத்தொடர்பு எண்கள் உங்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். இதன் மூலம் உங்கள் மண்டல அலுவலரை உடனடியாக தொடர்பு கொள்ளலாம்.
- *இந்திய தேர்தல் ஆணையம் / தேர்தல் பார்வையாளர்கள்* /தலைமைத் தேர்தல் அதிகாரி/மாவட்ட தேர்தல் அதிகாரி/தேர்தல் நடத்தும் அதிகாரி அல்லது பிற அலுவலர்கள் உங்களுடன் தொடர்பு கொண்டு முக்கிய நிகழ்வுகளைப் பற்றி தெரிந்து கொள்ள இத்தொடர்பு எண்கள் மிகவும் பயனுடையதாக இருக்கும்.

# 3. வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு முந்தைய நாள்

## பொருட்கள்

# வாக்குச் சாவடிக்கு செல்லுதல் மற்றும் தேர்தல் பொருட்களை பெற்றுக்கொள்ளுதல்

- வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு முந்தைய நாள் மதியத்திற்குள், நீங்கள் உங்கள் வாக்குச் சாவடிக்குச் சென்று *தேர்தல் பொருட்கள்* அனைத்தையும். மண்டல அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும்.

- உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பட்டியலின்படி அனைத்து தேர்தல் பொருட்களும் கொடுக்கப்பட்டுள்ளனவா என சரி பார்த்து வாங்கவும்

# தேர்தல் பொருட்கள்

**மிக முக்கியமான பொருட்கள்**

(i) வாக்குப்பதிவு இயந்திரம் (கட்டுப்பாட்டு கருவி மற்றும் வாக்குப்பதிவு கருவி)

(ii) ஆய்வுக்குறிய வாக்குச்சீட்டுகள்

(iii) வாக்காளர் பதிவேடு (படிவம் 17A)

(iv) குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்

(v) வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் நாட்குறிப்பு

(vi) கூடுதலான வாக்காளர் பட்டியல், பச்சை நிற காகித முத்திரை ஒட்டு முத்திரை, சிறப்பு டாக், சட்டமுறைமையான படிவங்கள், அரக்கு மெழுகு மற்றும் அழியாத மை

# தேர்தல் பொருட்கள். . . .

*வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களுக்கான கையேட்டிலுள்ள இணைப்பு 5ல்* கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு சட்டமுறைமையிலான மற்றும் சட்டமுறைமையற்ற படிவங்களையும் (Statutory and non-statutory Forms) அவற்றின் பயன்பாட்டினையும் கவனத்துடன் படியுங்கள்.

- இணைப்பு 5ல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படும் வாக்குச் சாவடிக்கான, *தேர்தல் பொருட்களின் பட்டியல்* கொடுக்கப்பட்டுள்ளது.
- *சட்டமுறைமையிலான (Statutory) 5 உறைகள்* உள்ளன அவை:

(1) குறிபிடப்பட்ட வாக்காளர் பட்டியல்

(2) படிவம் 17–A இல் உள்ள வாக்காளர் பதிவேடு

(3) வாக்காளர் துண்டுச் சீட்டுகள் (Voter’s slips)

(4) பயன்படுத்தப்பட்ட ஆய் வுக்குரிய வாக்குச் சீட்டுகள் (used tendered ballot papers) மற்றும் படிவம் 17–B-ல் உள்ள பட்டியல்.

(5) பயன்படுத்தப்படாத ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுகள் (unused tendered ballot papers).

# தேர்தல் பொருட்கள்...

- *11 சட்டமுறையற்ற (Non-Statutory) உறைகள் உள்ளன.* அவை:

(1) வாக்காளர் பட்டியலின் இதர நகல்கள்
(2) படிவம் 10 –வாக்குப் பதிவு முகவர்களின் நியமனம் மற்றும் வாக்குச் சாவடிக்கு உள்ளேயும் வெளியேயும் அவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்கான படிவம்.
(3) படிவம் 12–B தேர்தல் பணிச் சான்றிதழ்.
(4) படிவம் 14– எதிர்க்கப்பட்ட வாக்குகளின் பட்டியல்.
(5) படிவம் 14–A– பார்வையற்ற மற்றும் இயலாமையுற்ற வாக்காளர்களின் பட்டியல் மற்றும் அவர்களுக்கு உதவுவதற்காக உடன் வருவோரின் உறுதிமொழி.
(6) வயது குறித்த உறுதி மொழிகளும் மற்றும் அத்தகைய வாக்காளர்களின் பட்டியல்.
(7) எதிர்க்கப்பட்ட வாக்குகளுக்கான கட்டணத் தொகை மற்றும் அதற்குரிய ரசீது புத்தகம்.
(8) பயன்படுத்தப்படாத மற்றும் சேதமடைந்த காகித முத்திரைகள் (Paper Seals).
(9) பயன்படுத்தப்படாத வாக்காளர்களின் துண்டுச் சீட்டுகள்.
(10) பயன்படுத்தப்படாத மற்றும் சேதமடைந்த சிறப்பு அட்டைகள் (Special tags)
(11) பயன்படுத்தப்படாத மற்றும் சேதமடைந்த ஒட்டுத்தாள் முத்திரைகள்.

# தேர்தல் பொருட்கள்

- Indelible Ink - 1 vial<700 voters, 2 vials>700 voters
- Pins – Sheet of 25/PS
- White Twine - 5mts/PS
- Brown Sheets - 3/PS
- Sealing wax - 6 sticks/PS
- Cloth Rag - 1/PS
- Ball pen (3 Blue+ 1 red) - 4/PS









# தேர்தல் பொருட்கள்



- Pencil - 1/PS
- Candles - 4/PS
- Metal rule - 1/PS
- Khadi Mull 45cm*45cm - 1/PS



- Carbon Paper - 3/PS
- Plastic Cup (to keep indelible ink vial) - 1/PS
- Rubber band - 20/PS





# தேர்தல் பொருட்கள்

- Cello Tape - 1/PS
- White paper - 8/PS
- Rubber Stamp Pad - 1/PS
- Rubber Stamp Ink - 1/PS
- Drawing Pins (for setting voting compartment) - 25/PS
- Gum Bottle - 1/PS
- Voting Compartment - 1/PS










# தேர்தல் பொருட்கள்

- Metal Seal - 1/PS
- Polythene Sheets - 2/PS
- Arrow Cross Mark - 1/PS
- Match Box - 1/PS
- Distinguishing Mark Rubber Stamp bearing PS No. - 1/PS










# வாக்குச் சாவடியில் தேவைப்படும் படிவங்கள்

- Three most important Forms and their covers have been colour coded
  - Presiding Officers Diary – Blue-1/PS
  - Form 17C Account of Votes & paper seal account – Green-6/PS
  - Declarations by Presiding Officer – Yellow-1/PS
  - Visit Sheet
- Master Cover for placing above items in White colour



# வாக்குச் சாவடியில் தேவைப்படும் படிவங்கள்

- Voters Slips [with 100 slips in one bundle] - 10 per PS with 1000 voters, 15 per PS with more than 1000 voters
- Form 17-B list of Tendered Votes
- List of Challenged Votes - FORM 14
- List of Blind and Infirm Voters - FORM 14A
- Declaration by companion of Blind or Infirm Voters



# வாக்குச் சாவடியில் தேவைப்படும் படிவங்கள்

- Letter of complaint to Sub-Inspector of Police
- Form of declaration by elector about age
- Receipt of Challenge fee in a booklet form containing 20 forms



# வாக்குச் சாவடியில் தேவைப்படும் படிவங்கள்

- Appointment of Proxy by classified Service voter to give vote - FORM 13-F
- Revocation of appointment of Proxy and appointment of substitute proxy by classified service voter to give vote - FORM 13-G
- Appointment of Polling Agent - FORM 10
- Revocation of Appointment of Polling Agent - FORM 11



# மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்

- மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் வாக்குப்பதிவு கருவி மற்றும் கட்டுப்பாட்டு கருவியில் உள்ள அடையாள எண் மற்றும் முகவரி அட்டை உ ங்கள் வாக்குச்சாவடிக்கென ஒதுக்கப்பட்டது தானா என சரிபார்க்கவும்

- கட்டுப்பாட்டுக் கருவியிலுள்ள ‘Cand Set Section’ ல் உள்ள தேர்தல் நடத்தும் அலுவலரின் முத்திரையை சரிபார்க்கவும் (வாக்குச் சாவடி அலுவலர்கள் இம்முத்திரையை திறக்கவே கூடாது)

- கட்டுப்பாட்டுக் கருவியிலுள்ள “Cand Set Section” இல் உள்ள பாட்டரி முற்றிலும் செயல்படும் நிலையில் (fully operational) இருக்கும். இதனை சரிபார்க்க கருவியின் பின் பகுதியிலுள்ள மின் சுவிட்சை ‘ஆன்’ செய்ய வேண்டும். இப்படி சரிபார்த்தபின், மின் சுவிட்சை ‘Off’ நிலையில் வைத்து, பாட்டரியை ‘Off’ செய்ய வேண்டும்.

## மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்...

- உங்களிடம் போதிய அளவிற்கு வாக்குப் பதிவு கருவிகள் வழங்கப்பட்டுள்ளனவா மற்றும் அவை ஒவ்வொன்றிலும் வாக்குச் சீட்டு திரை (Ballot Paper Screen) யின் கீழ் வாக்குச் சீட்டு உரியவாறு பொருத்தப்பட்டுள்ளதா எனச் சரிபார்க்கவும்.

- வாக்குப் பதிவு கருவிகளின் எண்ணிக்கை தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையைச் சார்ந்திருக்கும். அதாவது, போட்டியிடும் வாக்காளர்களின் எண்ணிக்கை 2 முதல் 15 வரை 1 கருவியும், 16 முதல் 31வரை 2 கருவிகளும், 32முதல் 47 வரை 3 கருவிகளும், 48 முதல் 63 வரை 4 கருவிகளும் வழங்கப்படும். (1 button for NOTA after the last candidate )


- எத்தனை வேட்பாளர் போட்டியிட்டாலும், ஒரேயொரு கட்டுப்பாட்டுக்கருவி (Control Unit) மட்டுமே வழங்கப்படும்.

- வேட்பாளர்கள் + NOTA நீல நிற பட்டன் வெளியே தெரியும் படியும், பிற பட்டன்கள் தெரியாத படியும் இருக்கிறதா என சரிபார்க்கவும்

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்—வாக்குச்சீட்டு பொருத்துதல்

**Check whether proper ballot paper has been duly fixed under the ballot paper screen and is properly aligned (partition line of ballot paper should be aligned with the grooves on the cover)**






**Properly aligned Ballot paper**

# மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் – வாக்குச் சீட்டுத் திரையினை பொருத்தி மூடுதல் – சரிபார்த்தல்

Check whether Ballot Paper Screen has been closed



Check whether Address tag is firmly attached and Ballot Paper Screen is sealed



# மின்னணு வாக்குப் பதிவுக் கருவி. . . .

- வாக்குப் பதிவுக் கருவியின் வலது பக்க மேற்புறத்திலுள்ள சன்னல் மூலம் காணப்படும் ‘சிலைட் சுவிட்ச்’ (Slide Switch) முதல் வாக்குப் பதிவுக் கருவியில் 1 –ஆம் நிலையிலும், இரண்டாவது வாக்குப் பதிவுக் கருவியில் 2 –ஆம் நிலையிலும், இதேபோல் மற்ற கருவிகளில் வரிசையாக *தேர்தல் நடத்தும் அதிகாரியால் வைக்கப்பட்டிருக்கும்.*

- வாக்குப் பதிவு கருவிகளிலுள்ள சிலைடு சுவிட்ச் (கள்) செலோ டேப்பின் உதவியால் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

- வாக்குப் பதிவு இயந்திரத்திலோ அல்லது வாக்குப் பதிவுப் பொருட்களிலோ ஏதேனும் குறைபாட்டைக் கண்டறிந்தால், அதனை களைய, நீங்கள் மண்டல அலுவலரிடமோ அல்லது தேர்தல் நடத்தும் அதிகாரியிடமோ தெரிவிக்க வேண்டும்.


# வாக்குப் பதிவுக் கருவியின் - சிலைட் சுவிட்ச்’ (Slide Switch)

**Slide switch should have been set to:**


**Position “1”  in Balloting Unit 1 if the candidates + NOTA are 16 or less**




**Position “2” in Balloting Unit 2 for candidates + NOTA between 17 and 32**



**Position “3” in Balloting Unit 3 for candidates + NOTA between 33 and 48**



**Position “4” in Balloting Unit 4 for candidates + NOTA between 49 and 64**



# கட்டுப்பாட்டு கருவி மற்றும் வாக்குப் பதிவு கருவியை இணைத்தல்


- போட்டியிடும் வேட்பாளர்களின் (+NOTA) எண்ணிக்கை 16–க்கும் மிகையாக இருப்பின் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குப் பதிவுக் கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

- வாக்குச் சாவடி ஒன்றில் பயன்படுத்தப்படவிருக்கும் வாக்குப் பதிவுக் கருவிகள் அனைத்தையும் ஒன்றுடன் ஒன்று இணைக்க வேண்டும். முதலாவது வாக்குப் பதிவுக் கருவி மட்டுமே கட்டுப்பாட்டுக் கருவியுடன் இணைக்கப்படும்.

- இரண்டாவது வாக்குப் பதிவுக் கருவி, அதாவது, தள்ளு சுவிட்ச் நிலை 2ல் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பதிவுக் கருவி, தள்ளு சுவிட்ச் நிலை 1ல் வைக்கப்பட்டுள்ள முதலாம் வாக்குப் பதிவுக் கருவியுடன் இணைக்கப்படும்.

- மொத்தம் 3 வாக்குப் பதிவுக் கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டுமானால், மூன்றாவது வாக்குப் பதிவுக் கருவி, இரண்டாவது வாக்குப் பதிவுக் கருவியுடனும், இரண்டாவது வாக்குப் பதிவுக் கருவி முதலாவது வாக்குப் பதிவுக் கருவியுடனும் இணைக்கப்படும். நான்கு வாக்குப் பதிவுக் கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென்றால் 4 வது கருவி 3 வது கருவியுடனும், மூன்றாவது கருவி 2வது கருவியுடனும், 2வது கருவி முதல் கருவியுடனும் இதே முறையில் இணைக்கப்படும்.

*Diagram showing the interconnection of the four Ballot Units*




# வாக்குப் பதிவு கருவியை இணைத்தல்

**In case more than 1 BALLOTING unit is being used….**

**Connect the 2nd Ballot Unit to 1st Balloting Unit by connecting the interconnecting Cable of the 2nd Balloting Unit to Connector available in Connector Box in the rear of the 1st Balloting Unit**

**3rd Balloting Unit should be similarly connected to 2nd and the 4th Balloting Unit to 3rd**

**Rear portion of Balloting Unit**



**Connector for Additional Balloting Unit**

# அழியாத மை

- 700 வாக்காளர்களைக் கொண்ட வாக்குச் சாவடிக்கு, 10 மிலி அளவுள்ள ஒரு *அழியாத மைக்குப்பி* வழங்கப்படும். ஒரு வாக்குச் சாவடியில் 700 வாக்காளர்களுக்கு மேல் இருந்தால், 2 குப்பிகள் அழியாத மை வழங்கப்படும். பெட்டியில் வைக்கப்பட்டுள்ள குப்பிகளின் மூடி சரியாக முத்திரையிடப்பட்டுள்ளதா என *சரிபார்க்கவும்* (இல்லையெனில் மெழுகு / அரக்கினால் மறு முத்திரையிடவும்)

- இரு குப்பிகளிலும் தேவையான அளவு மை உள்ளதா என்று சரிபார்க்கவும் (இப்போது இடது கையின் ஆள்காட்டி விரல் நகத்தின் நுனியிலிருந்து கீழ்நோக்கி சதைப் பகுதியில் நகம் சேருமிடம் வரை மையிட வேண்டும்.

- *ஸ்டாம்ப் பேடுகள்* உலர்ந்து போகாமல் உள்ளதா என சரிபார்த்துக் கொள்ளவும்.

# பொருட்கள். . . .

- *குறுக்கு அம்புக்குறி ரப்பர் ஸடாம்ப் (Cross mark rubber stamp* மற்றும் *உலோக முத்திரைகளை (metal seals)* சரிபார்க்கவும்.

- குறுக்கு அம்புக் குறி ரப்பர் ஸ்டாம்ப்பின் இருபுறமும் முத்திரை உள்ளதா எனவும் ஸ்டாம்ப் பேடு உலர்ந்ததாக இராமலும் பார்த்துக் கொள்ளவும்.

- உங்களிடம் *2 ஸ்டாம்ப் பேடுகள்* மற்றும் *1 குப்பி ஸ்டாம்ப் பேடு மையும்* கொடுக்கப்பட்டுள்ளதா என சரிபார்க்கவும்.

- உங்கள் வாக்குச் சாவடி தற்காலிகமாக அமைக்கப்பட்டதாக இருந்தால், தேர்தல் பொருட்களை வைத்துக் கொள்ள ஒரு இரும்பு பெட்டியை பெற்றுக் கொள்ளவும்.

# பொருட்கள் . . . .

- *தாள் முத்திரைகளின்* (paper seals) வரிசை எண்களை சரிபார்க்கவும். உங்களுக்கு *பச்சை தாள் முத்திரைகள்* 2 (உபயோகத்திற்கு) + 4 (கையிருப்புக்கு) வழங்கப்பட்டிருக்கும். மேலும் *வெளி ஒட்டுத்தாள் முத்திரைகள்* (outer strip seals) 1 (உபயோகத்திற்கு) +3 (கையிருப்புக்கு) வழங்கப்பட்டிருக்கும்.

- உங்களிடம் வழங்கப்படும் *போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை சரிபார்க்கவும்.* அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் சின்னங்கள் சரியாக உள்ளனவா மற்றும் அதே வரிசையில் வாக்குப் பதிவுக் கருவியின் மீதுள்ள வாக்குத்தாளில் உள்ளனவா என்றும் சரிபார்க்கவும்.

# வாக்காளர் பட்டியல் நகல்கள்

- வாக்காளர் பட்டியலின் உரிய பாகத்தின் 3 நகல்களும் முழுமையாகவும் எல்லா விதங்களிலும் ஒரே மாதிரியான நகல்களாகவும் இருக்கின்றனவா என்று சரிபார்க்கவும் – மேலும்

(அ) குறிப்பாக, உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பாகத்தின் நகல். ஒவ்வொன்றும் உங்கள் வாக்குச் சாவடிப் பகுதிக்குரியதுதானா என்றும் எல்லா விதங்களிலும் முழுமையாகவும், துணைப் பட்டியல்களுடன் கூடியது தானா என்றும் சரிபார்க்கவும்.

(ஆ) துணைப் பட்டியலில் காணும் நீக்கப்பட்ட பெயர்கள், எழுத்துப் பிழைகள் மற்றும் இதர பிழைகள் அனைத்தும் எல்லா நகல்களிலும் குறிக்கப்பட்டுள்ளனவா என்று சரிபார்க்கவும்.

# வாக்காளர் பட்டியல் நகல்கள் . . . .

(இ) வாக்காளர் பட்டியலின் ஒவ்வொரு நகலிலும் உள்ள அனைத்துப் பக்கங்களும் தொடர் எண் 1 முதல் வரிசையாக எண்ணிடப்பட்டுள்ளனவா என்று சரிபார்க்கவும்.

(ஈ) அச்சிடப்பட்டுள்ள வாக்காளர்களின் தொடர் எண்கள் மையினாலோ வேறு வகையிலோ திருத்தப்படாமலும் வேறு புதிய எண்ணிடப்படாமலும் உள்ளனவா என்றும் சரிபார்க்கவும்.

# வாக்காளர் பட்டியல் நகல்கள் . . . .

(உ) வாக்களிக்க அனுமதிக்கப்படும் வாக்காளர்களின் பெயர்களைக் காட்டும் *குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில்*, அஞ்சல் வாக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டோர் குறித்த குறிப்புகளை (அதாவது PB,SV தவிர) வேறு குறிப்புகள் இல்லாமல் உள்ளனவா என்று சரிபார்க்கவும்.

- *துணைப்பட்டியல் 1ல்* காணப்படும் *நீக்கப்பட்ட* பெயர்கள் அனைத்தும், மறு அச்சிடப்பட்ட மூல வாக்காளர் பட்டியலில் உள்ள தொடர்புடைய வாக்காளர் விவரக் கட்டத்தின்மேல் “Deleted” என்று குறிக்கப்பட்டுள்ளதா என்றும். *துணைப் பட்டியல்* ஒன்றில் காணப்படும் *திருத்தங்கள்* மறு அச்சிடப்பட்ட மூல வாக்காளர் பட்டியலில் # (hash) குறி மூலம் குறிக்கப்பட்டுள்ளதா என்றும், சேர்க்கப்பட்ட / திருத்தப்பட்ட / நீக்கப்பட்ட புகைப்படங்கள் குறித்து *புகைப்படக் கட்டத்தின்மீது* “Photo as in supplement” என்று குறிக்கப்பட்டுள்ளதா என்றும் சரிபார்க்கவும்.

# வாக்காளர் பட்டியல் நகல்கள் . . . .

- தேர்தல் நடைபெறும் ஆண்டில், இறுதியாக வெளியிடப்பட்ட மூல *வாக்காளர் பட்டியலுக்கு துணைப்பட்டியல்–II* என்பதும் தயாரிக்கப்படும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். (ஏனெனில் வேட்பாளர் நியமனத்திற்கான கடைசி நாள் வரையில் வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்கலாம்)

- இந்த துணைப் பட்டியலில் காணப்படும் நீக்கல்கள் மற்றும் திருத்தங்கள், மூல வாக்காளர் பட்டியலிலும், துணைப்பட்டியல் ஒன்றிலும் *கையினால்* அடித்தோ அல்லது # (hash) குறி கொண்டோ குறிக்கப்படும்.

# வாக்காளர் பட்டியல் நகல்கள் . . . .

(ஊ) உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரிகளுள் ஒருவர் மற்றும் வேறு ஒரு அலுவலர், வாக்காளர் பட்டியலில் உரிய முறையில் கையொப்பமிட்டுள்ளனரா என்று சரிபார்க்க வேண்டும்.

(எ) தேர்தல் நடத்தும் அதிகாரி அல்லது உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியினால், மையினால் கையொப்பமிட்ட வரையறுக்கப்பட்ட சான்றிதழ், குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்மேல் இணைக்கப்பட்டுள்ளதா என சரிபார்க்க வேண்டும்.

# ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுகள், மாதிரிக் கையொப்பங்கள்

- வாக்குச் சாவடி அமைந்துள்ள அதே தொகுதிக்கான *ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுகள்* (tendered ballot papers) தான் கொடுக்கப்பட்டுள்ளன என சரிபார்க்கவும். அவற்றின் தொடர் எண்கள் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களோடு ஒத்துப் போகின்றனவா என்று சரிபார்க்கவும். பின்புறத்தில் "ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டு" என்ற முத்திரை குத்தப்பட்ட 20 ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

- போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது தேர்தல் முகவர்களின் *மாதிரி கையொப்பத்தின்* நகல் கொடுக்கப்பட்டுள்ளனவா என சரிபார்க்கவும் வாக்குச் சாவடி முகவர்களின் நியமன கடிதத்தில் உள்ள வேட்பாளரின் கையொப்பத்தை சரிபார்க்க இது உங்களுக்கு உதவும்.

# பொருட்களை பத்திரமாக பாதுகாத்தல்

- வாக்குப் பதிவு முடிவடைந்து மண்டலக் குழுவினரிடம் (Zonal Party) ஒப்படைக்கப்படும் வரையில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப் பதிவுக் கருவி இயந்திரம் வாக்குப் பதிவு பொருட்கள் உங்கள் பொறுப்பில் பத்திரமாக இருக்க வேண்டும்.

- மின்னணு வாக்குப் பதிவு இயந்திரமும், கருவியும் வாக்குப் பதிவுப் பொருட்களும் வழங்கப்படுவதிலிருந்து அவற்றிற்குப் பொறுப்பாக (நீங்களோ, உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்குப் பதிவு அலுவலர்களில் ஒருவரோ), you and your team வாக்குச் சாவடியில் இருக்க வேண்டும்.

- நீங்கள் அல்லது உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்குப் பதிவு அலுவலர்களில் ஒருவரைத் தவிர, வாக்குச் சாவடியில் பாதுகப்புக்காக உள்ள காவலர்கள் வசமோ அல்லது மற்ற எந்த நபரின் வசமோ மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மற்றும் வாக்குப் பதிவு பொருட்கள் ஒப்படைக்கப்படக் கூடாது.

# 4. வாக்குச் சாவடி அமைத்தல்

# வாக்குப் பதிவு அலுவலர்கள்

- வாக்குப் பதிவு அலுவலர்கள் மற்றும் காவலர்கள் அனைவரும் வந்துள்ளனரா என்று சரிபார்க்கவும். இல்லையெனில், மண்டலக் குழுவினர் (Zonal Party) இரண்டாம் முறை வரும்போது அவர்களிடம் தெரிவித்து இரவுக்குள் பதிலாள் வருவதை உறுதி செய்து கொள்ளவும்.

- உங்களுடைய வாக்குச் சாவடியில் பெண் வாக்காளர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கும் பட்சத்தில். அவர்களை அடையாளம் காணவும். அந்தரங்கம், கண்ணியம், நாகரீகம் ஆகியவற்றைக் காத்திடுதலைக் கருத்தில் கொண்டு. ஒரு பெண் உதவியாளரை நியமித்திட தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் சொல்லி ஏற்பாடு செய்ய வேண்டும்.

# வாக்குச் சாவடி அமைத்தல் . . . .

- வாக்குச் சாவடி அமைப்பதற்கு திட்டமிடுங்கள்.
- நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியவை.

(அ) வாக்காளர்கள் காத்திருப்பதற்கு வாக்குச் சாவடிக்கு வெளியே போதுமான இடவசதி.

(ஆ) ஆண் மற்றும் பெண் வாக்காளர்களுக்கு முடிந்தவரை தனித்தனியே காத்திருக்குமாறு இடம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

(இ) வாக்காளர்கள் நுழையவும் வெளியேறவும் தனித்தனி வழிகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

(ஈ) நுழைவாயில் ஒன்று மட்டுமே இருப்பின். அதன் நடுவில் ஒரு கயிற்றைக் கட்டி நுழையவும் வெளியேறவும் தனித்தனி வழியினை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

# வாக்குச் சாவடி அமைத்தல் . . . .

- வாக்குப் பதிவு அடைப்புப் பகுதிக்குள் (Voting compartment) போதுமான அளவு வெளிச்சம் உள்ளதா எனச் சரிபார்க்கவும். தேவைப்பட்டால், ஒவ்வொரு வாக்குப் பதிவு அடைப்புப் பகுதிக்குள்ளும் மின் விளக்கு பொருத்த ஏற்பாடு செய்யவும்.

(உ) வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்குள் நுழையும் நேரத்திலிருந்து அவர்கள் அதனைவிட்டு வெளியேறும் வரையில் தங்கு தடையில்லாமல் சென்று வருமாறும் அவ்வாறு செல்லுகையில் வாக்குச் சாவடிக்குள் குறுக்கு நெடுக்கான நடமாட்டம் இல்லாதவாறும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# வாக்குச் சாவடி அமைத்தல். . . .

- நீங்கள், உங்களுடைய வாக்குப் பதிவு அலுவலர்கள் மற்றும் வேட்பாளர்களின் வாக்குப் பதிவு முகவர்கள் அமரும் இடங்களையும், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் கட்டுப் பாட்டுக் கருவி வைக்கப்படும் இடத்தையும் முடிவு செய்து கொள்ளவும்.

(ஊ) வாக்குச் சாவடிக்குள் ஒரு வாக்காளர் நுழையும் போதே அவருடைய முகத்தைப் பார்க்கும் வகையில். வாக்கப் பதிவு முகவர்களை அமர வைக்க வேண்டும். வாக்கப் பதிவுக் கருவியினையோ வாக்காளர் தமது வாக்கினைச் செலுத்துவதையோ பார்க்கும் வகையில். அவர்களை அமர வைக்கக் கூடாது.

(எ) வாக்காளர் தமது வாக்கினைச் செலுத்துவதைப் பார்வையிடும் வகையில் வாக்குப் பதிவு அலுவலர்களும் அமர வைக்கப்படக் கூடாது.

# வாக்குச் சாவடி அமைத்தல். . . .

- வாக்குப் பதிவு அடைப்புப் பகுதிக்குள் (Voting Compartment) மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தை வைக்கும்போது. வாக்குப் பதிவின் இரகசியத்தன்மை காக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

- வாக்குப் பதிவு அடைப்புப் பகுதி செய்யப்படும்போது அது கார்ட்போரட் அட்டையில் 23''x 23''x 23'' என்ற அளவில் செய்யப்பட்டிருப்பதையும், சன்னல் /கதவுக்குப் பக்கத்தில் அமைக்கப்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். சன்னல் / கதவு ஆகியவற்றிலிருந்து தள்ளியே Voting Compartment அமைக்கப்பட வேண்டும்.

# வாக்குச் சாவடி வசதிகள்

**கீழ்க்கண்டவை உறுதி செய்யப்பட வேண்டும்.**

- **வாக்குச் சாவடிக்குள் ஊனமுற்றோர் வருவதற்கு வசதியான சாய்தளங்கள் அமைக்கப்படுதல்.**
- **குடி தண்ணீர் வசதி,**
- **பெட்ரோமாக்ஸ் விளக்கு,**
- **மேசை, நாற்காலி ஆகிய வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும்**

**(இதற்கான செலவினத்தை ஈடு செய்யலாம்).**

# வாக்காளர் உதவி மையம்

- **வாக்குச் சாவடிகளில், *வாக்காளர் உதவி மையம்* நிறுவப்பட வேண்டும்.**

- **இம்மையத்தில், வாக்காளர்களின் பெயர்கள் *அகர வரிசைப்படி அமைக்கப்பட்ட வாக்காளர் பட்டியல்* ஒன்று இருக்கும். இதன் மூலம் தங்கள் பெயர் எந்த வாக்குச் சாவடியில் உள்ளது என வாக்காளர்கள் எளிதில் கண்டு கொள்ளலாம். (வாக்குப் பதிவு அதிகாரிகள் கையேடு பகுதி VI, 31 (d)**
  - **This facilitation centre would also have balance official voter slips of those who could not be given the voter slips**

- **வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்கு எளிதில் சென்றடையும் வண்ணம், *முக்கியமான இடங்களில் வழி காட்டி பலகைகள்* வைக்கப்பட்டிருக்கும். (இந்திய தேர்தல் ஆணைய கடித எண்.23/METRO/2008-ERS, நாள் 30.01.2009).**

# அறிவிப்பைக் காட்சிக்கு வைத்தல்

- ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கு வெளியேயும் அந்த வாக்குச் சாவடிப் பரப்பையும் அங்கு வாக்களிக்கக் கூடிய வாக்காளர்களின் விவரத்தையும் அனைவருக்கும் நன்கு தெரியும் வண்ணம் *காட்சிக்கு* வைக்க வேண்டும்.

- வாக்காளர் பட்டியலிலுள்ள பிரிவுகளின் பட்டியல் (தொடக்க மற்றும் இறுதி வரிசை எண்களோடு) காட்சிக்கு வைக்க வேண்டும். மேலும், அதே வளாகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பொது/துணை வாக்குச் சாவடிகள் இருப்பின் சரியான வாக்குச் சாவடியைக் குறியிட்டுக் காட்டும் வகையில் அம்புக் குறியிட்டுக் காட்டப்பட வேண்டும்; ஆண் / பெண் அறிவிப்பு அட்டைகளும் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்.

- *படிவம் 7A ல் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை* காட்சிக்கு வைக்கவும்.

- போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலிலுள்ள மொழியிலேயே மேற்கூறிய அறிவிப்பு தயாரிக்கப்பட வேண்டும். வேட்பாளர் பட்டியலில் உள்ள வேட்பாளர்களின் வரிசைப்படியே இந்த அறிவிப்பு தயார் செய்ய வேண்டும்.

# 100 மீட்டர் சுற்றளவுக்குள் எந்த அரசியல் விளம்பரங்களும் இருக்கக்கூடாது.

- வாக்குச் சாவடியின் 100 மீட்டர் சுற்றளவுக்குள் எந்தவிதமான அரசியல் விளம்பரங்களோ பந்தல்களோ அமைக்கப்படக் கூடாது *(தடை செய்யப்பட்ட பகுதி)*

- வாக்குச் சாவடிக்குள் எந்த ஒரு அரசியல் தலைவரின் படம் இருந்தாலும் அதை நீக்கிவிடவும், அல்லது அதை உறையிட்டு முழுமையாக மூடிவிட வேண்டும்.

# வாக்குச் சாவடி தலைமை அலுவலர் மற்றும் 3 வாக்குச் சாவடி அலுவலர்கள் உள்ள இடங்களில் அவர்களின் கடமைகள்

- *வாக்குப் பதிவு அலுவலர் 1* இடம் *குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்* இருக்கும். வாக்காளர்களை அடையாளம் காண்பதற்கும் அவரே பொறுப்பாவார்

- *வாக்குப் பதிவு அலுவலர் 2* வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரலில் *அழியாத மை* இட்டு *வாக்காளர் பதிவேட்டில்* வாக்காளரின் பாகம் எண், வரிசை எண், ஆகியவற்றை எழுதி, வாக்காளர் காட்டும் புகைப்பட அடையாள அட்டை போன்ற அடையாள ஆவணத்தின் பெயரை பதிவேட்டின் 4 வது காலத்தில், அதாவது குறிப்புகள் காலத்தில் அந்த ஆவணத்தின் எண்களை எழுத வேண்டும்.
  - **EPIC or the Official Voter Slip are the only documents allowed for identification – no other document like passport, ration card, etc should be entertained**

- அதன்பிறகு, வாக்காளரின் கையொப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவினை பெற்றுக் கொண்டு, *வாக்காளர் துண்டுச் சீட்டினை* வழங்க வேண்டும்.

# வாக்குப் பதிவு அலுவலர்களின் பணிகள்....

- வாக்குப் பதிவு அலுவலர் 2, வாக்காளர் பதிவேட்டினை நிரப்பி, வாக்காளர் துண்டுச் சீட்டினை அளிக்க நிறைய நேரம் எடுத்துக் கொள்ளப்படும் பட்சத்தில் வாக்காளர் வரிசை மெதுவாக நகரும் வாய்ப்பு உண்டு.

- அதனால் அனைத்து வாக்குப் பதிவுக் குழுவினரிடமும் அச்சிடப்பட்ட வெற்று வாக்காளர் துண்டுச் சீட்டுகள் இருப்பது அவசியமாகும்.

- ஒரு வாக்குச் சாவடிக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 1200 –க்கு மேல் இருக்குமானால், கூடுதல் வாக்குப் பதிவு அலுவலர் 2 நியமிக்கப்பட வேண்டும். (இவர் வாக்குப் பதிவு அலுவலர் 2B என்று அழைக்கப்படுவார்)

(25/10/2007 நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையக் கடிதம்)

# வாக்குப்பதிவு அலுவலர்களின் பணிகள்....

- *வாக்குப் பதிவு அலுவலர் 3, கட்டுப்பாட்டு கருவிக்கு பொறுப்பாவார்.* அவர் வாக்காளர்களிடம் இருந்து வாக்காளர் துண்டுச் சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். வாக்காளர்களின் இடது கை ஆள்காட்டி விரலில் இடப்பட்டுள்ள அழியா மையை சரிபார்க்க வேண்டும். *முக்கியமாக கட்டுப்பாட்டு கருவியிலுள்ள வாக்குப் பதிவு பட்டனை அழுத்தி* வாக்குப் பதிவு அடைப்புப் பகுதியில் உள்ள வாக்குப் பதிவுக் கருவியை வாக்களிக்க தயார் நிலையில் வைத்து, வாக்குப் பதிவு அடைப்புப் பகுதிக்குள் செல்ல வாக்காளர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

# கட்டுப்பாட்டு கருவியிலுள்ள வாக்குப் பதிவு பட்டன்




**Total Button**

**Ballot Button**

# வாக்குப் பதிவு அலுவலர்களின் செயல்பாடுகள்

- *வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 1200 த்துக்குள் இருந்தால்* அங்கு ஒரு வாக்குச் சாவடி தலைமை அலுவலர் மற்றும் 3 வாக்குப் பதிவு அலுவலர்க இருப்பர்.

- *வாக்குச் சாவடி தலைமை அலுவலர்* – சாவடியின் மொத்த பணிகளையும் மேற்பார்வையிடுவார்.

- *வாக்குப் பதிவு அலுவலர் 1* குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் நகல் மற்றும் வாக்காளரின் அடையாளத்திற்கு பொறுப்பாளர்.

- *வாக்குப் பதிவு அலுவலர் 2* அழியா மையிடுதல், படிவம் 17A யிலுள்ள வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் வாக்காளர் துண்டுச்சீட்டு வழங்குதல் மற்றும்

- *வாக்குப் பதிவு அலுவலர் 3* கட்டுப்பாட்டுக் கருவிக்கு பொறுப்பாளர். மேலும், வாக்காளர்களின் இடது கை ஆள்காட்டி விரலில் அழியாமை உள்ளதா என சரிபார்ப்பவர்.

# வாக்குப் பதிவு அலுவலர்களின் பணிகள். . . .

- *1000 த்துக்கு மேல் வாக்காளர்கள் இருந்தால், அங்கு ஒரு கூடுதல் வாக்குப் பதிவு அலுவலர் நியமிக்கப்படுவார்.* **வாக்குப் பதிவு அலுவலர் 2ன் செயல்பாடுகள், வாக்குப் பதிவு அலுவலர் 2A மற்றும் வாக்குப் பதிவு அலுவலர் 2B க்கு பகிர்ந்தளிக்கப்படும். அவை:**
- *வாக்குப் பதிவு அலுவலர் 2 A -* **அழியாத மை இடுவது.**
- *வாக்குப் பதிவு அலுவலர் 2B* **- படிவம் 17A யிலுள்ள வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் வாக்களர் துண்டுச் சீட்டு வழங்குதல்.**

# வாக்காளர் வரிசையை முறைப்படுத்துவதற்கான கூடுதல் நபர்

- **வாக்களிப்பதற்காக வரிசையில் காத்திருக்கும் நபர்களின் அடையாளத்தைக் காட்டும் ஆவணங்களைச் சரிபார்க்க கூடுதல் நபர்களை, வாக்குப் பதிவுக் குழுவில் இடம் பெறச் செய்யலாம்.**


- **கிராம நிர்வாக அலுவலர் அல்லது மற்ற உள்ளூர் அலுவலர்கள் வாக்குச் சாவடிக்கு வெளியே கூடுதல் வாக்குப் பதிவு அலுவலர்களாக செயல்படுவர். அவர்கள் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையோ அல்லது *Official Voter Slip* (மற்ற ஆவணங்களோ) வைத்திருக்கும் நபர்களை மட்டுமே வரிசையில் நிற்க அனுமதிக்க வேண்டும்.**

- **துணை இராணுவப் படையினர் அவ்விடத்திலிருந்தால், இதை கண்காணிக்கலாம்.**

- ***வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது Official Voter Slip (இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட பிற மாற்று ஆவணங்களை) வைத்திருப்பவர் மட்டுமே வரிசையில் நிற்க அனுமதிக்கப்படுவர்.***

(18/12/2008 நாளிட்ட இந்தியத் தேர்தல் ஆணையக் கடிதம்)

# வாக்குச் சாவடியின் மாதிரி அமைப்பு



# 5. தேர்தல் நாளன்று –
# தேர்தல் தொடங்கும் முன்

# வாக்குப் பதிவு தொடங்குவதற்கு 1 Hour before வாக்குப் பதிவு

- குழுவைச் சேர்ந்த அனைத்து அலுவலர்கள், காவல் துறையினர், வீடியோ எடுக்கும் நபர் ஆகியோர் வாக்குச் சாவடிக்கு வந்து விட்டனரா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தை இணைக்கும் ஒயரின் குறுக்கே யாரும் செல்லாதபடி வாக்குச் சாவடியை அமைக்க வேண்டும்.
- மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மற்றும் வாக்குப் பதிவிற்கான பொருட்களை சரிபார்க்கவும்.
- ஒத்திகை வாக்குப் பதிவு (mock poll) முடிந்தவுடன் வாக்குப் பதிவு அடைப்புப் பகுதியை பொருத்துவதற்கு ஏதுவாக வைத்திருக்கவும்.
- உங்களது புகைப்பட அடையாள அட்டையை அணிந்து கொள்ளவும்.

# வாக்குச் சாவடி முகவர்கள்

(அ) வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை வைத்திருக்கும் சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த நபர் மட்டுமே *வாக்குச் சாவடி முகவர் / Relief முகவராக நியமிக்கப்பட வேண்டும்.* படிவம் 10 உடன், வாக்குச் சாவடி தலைமை அலுவலரிடம் வருமுன்,அவர்களின் அடையாள அட்டை வெளியில் நன்கு தெரியுமாறுஅணிந்திருக்க வேண்டும். தவிர அவர் ஒரு வாக்காளர் என்பதை உறுதி படுத்துவதற்கான வேட்பாளர்/தேர்தல் முகவரால் சான்றளிக்கப்பட்ட சமீபத்திய வாக்காளர் பட்டியலின் நகலினை தன்னுடன் எடுத்து வருதல் வேண்டும்.

(ஆ) வாக்குப் பதிவு தொடங்குவதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன் வாக்குச் சாவடி தலைமை அலுவலரிடம் *படிவம் 10–ஐ* சமர்ப்பித்து ஒவ்வொரு வேட்பாளரும் ஒரு வாக்குச் சாவடிக்கு ஒரு வாக்குச் சாவடி முகவர் மற்றும் இரு Relief முகவர்களை *நியமிக்கலாம்.*

# வாக்குச் சாவடி முகவர்கள்...

(இ).படிவம் 10–இல் வேட்பாளர் அல்லது அவரது முதன்மை முகவர் கொடுக்கும் வாக்குச் சாவடி முகவர்களின் நியமன கடிதத்தில் உள்ள கையெழுத்தும், வாக்குப் பதிவு உபகரணங்களுடன் அனுப்பப் படட மாதிரி கையெழுத்துக்களும் ஒரே மாதிரி உள்ளனவா என்பதை சரிபார்க்கவும்.

(ஈ). 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் பிரிவு 128 இல் உள்ள உட்கூறுகளை முகவர்களுக்கு விளக்கவும்.

# வாக்குச் சாவடி முகவர்கள்...

(உ) வாக்குச் சாவடிக்குள் ஒரு நேரத்தில் ஒரு வேட்பாளருக்கு ஒரே ஒரு வாக்குச் சாவடி முகவர் மட்டும் இருக்கும் படி வீதம் *நுழைவுச் சீட்டு* வழங்கவும். ஒரே நேரத்தில் வாக்குச் சாவடிக்குள் ஒரு வேட்பாளருக்கு ஒரு முகவருக்கு மேல் இல்லாதபடி வழங்கப்பட்ட நுழைவுச் சீட்டுகளின் விவரத்தினை *இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட படிவத்தில் குறித்துக்* கொள்ளவும். அதை வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குப் பதிவு பொருட்களுடன் மண்டல குழுவிடம் சமர்ப்பிக்கவும்.

# வாக்குச் சாவடி முகவர்கள்...

(ஊ) முகவர்களுக்கான இருக்கைகளை நிர்ணயித்தல், வாக்குச் சாவடியில் வேட்பாளர்களின் முகவர்களுக்கு கீழ்க்கண்டவாறு இருக்கைகளை நிர்ணயிக்கவும்:

- i) அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளின் வேட்பாளர்கள்
- ii) அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சிகளின் வேட்பாளர்கள்
- iii)ஒதுக்கப்பட்ட சின்னங்களை பயன்படுத்த அனுமதிக்கப் பட்டவேறு மாநிலத்தைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சியின் வேட்பாளர்கள்.
- iv) பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் வேட்பாளர்கள்:
- v) சுயேட்சை வேட்பாளர்கள்.

# வாக்குச் சாவடி முகவர்கள்...

- **முகவர்களை நியமிப்பதற்கான கால வரம்பினை சட்டம் நிர்ணயிக்கவில்லை.**

  **முகவர் யாராவது வாக்குச் சாவடிக்கு தாமதமாக வந்தால், அவரை வாக்குச் சாவடிக்குள் சென்று தொடர் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும்.**

- **வாக்குச் சாவடிக்குள் இருக்கும்போது முகவர்கள் தங்களது நுழைவுச் சீட்டினை அணிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.**

**(எ) வாக்குச் சாவடி முகவர்களுக்கு வாக்காளர் பட்டியலின் நகலினையும்,வாக்காளர்கள் பதிவேட்டினையும் காண்பிக்கவும். மேலும், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் எண்ணைக் குறித்துக் கொள்ள அவர்களை அனுமதிக்கவும்.**

பாகம் 13 இல் உள்ள சான்றினை உரத்த குரலில் படித்து, அதில் முகவர்களின் கையெழுத்தைப் பெறவும், அதில் கையெழுத்திட மறுக்கும் முகவர்களின் பெயர்களைக் குறித்துக் கொண்டு, நீங்களே கையெழுத்திடவும்.

# வாக்குச் சாவடி முகவர்கள்...

(ஏ) வாக்குப் பதிவு முடியும் வரை, வாக்குப் பதிவின் போது குறிக்கப்படும் வாக்காளர் பட்டியலின் நகலினை வாக்குச் சாவடிக்கு வெளியே எடுத்துச் செல்ல வாக்குச் சாவடி முகவர்களுக்கு அனுமதிக்கக் கூடாது. வாக்குச் சாவடிக்கு வெளியே வரும் ஒவ்வொரு முறையும் வாக்காளர் பட்டியலின் நகலினை, Relief முகவரிடமோ அல்லது வாக்குச் சாவடி தலைமை அலுவலரிடமோ கொடுக்க வேண்டும்.

மேலும், வாக்குப் பதிவு முடிவுற 2 மணி நேரத்திற்கு முன், (after 3 pm) வாக்குச் சாவடிக்கு வெளியே செல்லவோ அல்லது வாக்குச் சாவடியை விட்டு செல்லவோ வாக்குச் சாவடி முகவர் எவரையும் அனுமதிக்கக் கூடாது.

வாக்குச் சாவடிக்கு வெளியில் மத்திய காவல் துறை காவலர் இருந்தால், அவர்கள் வாக்குச் சாவடிக்குள் வாக்குச் சாவடி முகவர்களின் நடத்தையை கண்காணித்துக் கொண்டு இருப்பார்.

# வாக்குப்பதிவு தொடங்கும் முன் செய்ய வேண்டியவை

**Start preparation of EVM at least 1 hour before the hour fixed for commencement of poll**


**Remove the Balloting Unit and Control Unit from their carrying cases**

**Connect Balloting Unit to the Control Unit**


**Open Bottom compartment of Control Unit and Switch 'ON' Power**

| | |
|---|---|
| EVM IS ON<br>ECI | |
| DTE 16-01-07<br>TME 09-43-34 | Indicates date is in DD-MM-YY and time is in HH-MM-SS Format |
| SLNO-H00003 | Indicates the serial number of the Control Unit PCB |
| CANDIDATES<br>10 | Indicates the contesting candidates are ten (assuming there are 10 candidates in the constituency |
| BATTERY<br>HIGH | Indicates the status of the battery is 'HIGH' |

# ஒத்திகை வாக்குப் பதிவு நடத்தும் முறை




1




2

Open "Result Section" outer door and then the inner door





4

3



# ஒத்திகை வாக்குப் பதிவு நடத்தும் முறை




**Press CLEAR Button to show to the Polling agents present that there are no votes polled.**

# ஒத்திகை வாக்குப் பதிவு நடத்தும் முறை





Press BALLOT button on Control Unit. On pressing Busy lamp in display section will glow red, simultaneously the Ready lamp on the ballot unit will also glow green candidate in Balloting Unit




Ask Polling Agents to cast one/ equal no. of votes for any of the candidates and request to remember whom they voted


# ஒத்திகை வாக்குப் பதிவு நடத்தும் முறை




Close the Mock Poll by pressing **Close** button in Control Unit

Press **Ballot** button in Control Unit to show NO vote can be recorded further after the **Close** button is pressed. **Invalid** message is displayed

# ஒத்திகை வாக்குப் பதிவின் முக்கிய அம்ச□கள்



# ஒத்திகை வாக்குப் பதிவு நடத்தும் முறை




**Press Result and show the Mock Poll result**

# ஒத்திகை வாக்குப்பதிவு வரிசைமுறை

Ensure that equal number of votes are polled for all candidates



Clear

2

Ballot

3

Close

4

Result

5

Clear

6

Switch off

7

Seal

# வாக்குப் பதிவு நாளன்று வாக்குப் பதிவு தொடங்கும் முன்....

- வாக்குப் பதிவு தொடங்குவதற்கு 1 hour before ஒவ்வொரு வேட்பாளருக்கும் சில வாக்குகளைப் பதிவு செய்ய *ஒத்திகை வாக்குப் பதிவு* நடத்தவும்.

- இருவேறு வேட்பாளர்களின் முகவர்கள் வராதநிலையில், வாக்குச் சாவடி தலைமை அலுவலர் மேலும் 15 நிமிடங்கள் காத்திருக்கலாம். பிறகு *ஒத்திகை வாக்குப் பதிவு* நடத்தி, அதற்குரிய *சான்றிதழை*த் தயாரித்து உரிய படிவத்தில் கையெழுத்திடவும். இணைப்பு XVIII (இந்திய தேர்தல் ஆணையத்தின் 15.7.2008 மற்றும் 18.12.2008 நாளிட்ட கடிதங்கள்)

## Annexure

## Mock Poll Certificate

Certified that I .................. Presiding Officer at the Polling Station No.................... Polling Station Name .................... of Assembly Constituency No. ............... Assembly Constituency Name ................................ OR Assembly Segment No .......... Assembly Segment Name ........................ under Parliamentary Constituency No ......... Parliamentary Constituency Name ................................... conducted the mock poll at ........ AM today, the poll day i.e. ............. (fill date), by scrupulously following all the instructions issued by the Election Commission of India.

1. ............ votes were cast for each candidate and also for NOTA.
2. It was verified that the LED light was getting lit up against the correct candidate/NOTA button, when the button was pressed and the beep sound was properly heard.
3. Total .......... votes were polled in the mock poll. The result was carefully tallied and it was found to tally correctly with the record of votes polled kept by the Polling Officer.
4. **I have cleared the memory of the EVM after the mock poll and verified that the memory has been cleared by pressing the Total button and seeing that the Total is shown as '0'.**
5. At the time of mock poll the following of polling agents representing the candidates whose names mentioned against the names of such agents were present and I have obtained their signatures.
6. Poll Start Date and Time seen on the display of the CU at the time of start of actual poll ......................... (To be filled in case of Post-2006 EVM)

| Sl.No. | Name of Polling Agent | Name of Party | Name of candidates | Signature of PollingAgent |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

Or

At the time scheduled for mock poll no polling agent was present/ the agent of only one contesting candidate was present. After waiting for fifteen more minutes, I conducted the mock poll along with other polling staff at ........ AM.

Signature of micro-observer (if posted at the polling station)

Date:
Time:

Name & Signature
of the Presiding Officer
Polling Station No.............
Polling Station Name .....................

## DECLARATION BY THE PRESIDING OFFICER

## PART – I

**Declaration by the Presiding Officer Before the commencement of the Poll**

Election to ---------------------------- Assembly Constituency.

No. and Name of Polling Station ----------------------------

Date of Poll ------------------

I hereby declare:

1. That I conducted the mock poll at —— AM today, following the instructions issued by the Election Commission of India.

A total of —— votes were polled in the mock poll and after the mock poll I have carefully cleared the memory and the total votes polled showed '0' after clearing the memory.

A. At the time of mock poll, the following of polling agents representing the candidates whose names mentioned against the names of such agents were present and I have obtained their signatures.

OR

B. At the time of mock poll, the agent of only one contesting candidate was present. After waiting for ten more minutes I conducted the mock poll along with other polling staff at ——— AM. I have mentioned the name of the agent present at the time of mock poll including the name of the candidate whom he represented.

# வாக்குப் பதிவு ஒத்திகை...

- வாக்குச் சாவடியுடன் உள்ள தகவல் தொடர்பு அல்லது மொபைல் குழு அல்லது செக்டார் அலுவலர்கள் மூலமாக 30 நிமிடங்களுக்குள் வாக்குப் பதிவு ஒத்திகையின் நிலவரத்தை தேர்தல் நடத்தும் அலுவலர் அறிந்து கொள்ள வேண்டும். வாக்குப் பதிவு ஒத்திகையை உறுதி செய்யாத நிலை, வாக்குச் சாவடி தலைமை அலுவலரின் மீதோ அல்லது மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்திலோ ஏதேனும் தவறு உள்ளதைக் குறிக்கும்.

- ஒரு வாக்குச் சாவடியில் போட்டி வேட்பாளர்களின் முகவர்கள் வராமல் வாக்குப் பதிவு ஒத்திகை நடத்தப் படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், நுண்பார்வையாளரை நியமித்தல், வீடியோ படம் எடுத்தல், செக்டார் அலுவலர்கள் மற்ற முதுநிலை அலுவலர்கள் செல்வது போன்றவைகளை உடனடியாக செயல்படுத்த வேண்டும். ( இந்திய தேர்தல் ஆணையத்தின் 15.7.2008 மற்றும் 18.12.2008 நாளிட்ட கடிதங்கள்).

# மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் – வாக்குப் பதிவிற்காக முத்திரையிடுதல்

- ‘Clear’ பட்டனை அழுத்தி, அதன் முடிவை முகவர்களுக்கு காண்பிக்க வேண்டும்.

- பின்புறமுள்ள உறையை திறந்து மின் இணைப்பை துண்டிக்கவும்.

- வாக்குப் பதிவு கருவியின் முடிவு பிரிவின் கதவின் உட்பக்க கட்டத்தில் *பச்சை நிற தாள் முத்திரையைப்* பொருத்தவும்.


- தாள் முத்திரையின் இருபக்க வெளி முனைகள் வெளியே நீட்டிக் கொண்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டு, உட்புற கதவை மூடவும்.

# பச்சைத் தாள் முத்திரையில் கையொப்பம் இடுதல்

- மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் கட்டுப்பாட்டுக் கருவியில் பச்சைத்தாள் முத்திரையை ஒட்டவும். கட்டுப்பாட்டுக் கருவியின் வாக்குப் பதிவு முடிவுப் பிரிவில் உட்பக்க அறைக் கதவின் உட்பக்கத்தின் மேல், காகித முத்திரை ஒட்ட அடைப்பிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- பச்சைத் தாள் முத்திரையை ஒட்டுவதற்கு முன், தாள் முத்திரையின் வெண்மைப் பகுதியில் வரிசை எண்ணை அடுத்து, கீழே வாக்குச் சாவடி தலைமை அலுவலர் அவருடைய முழு கையெழுத்தை இட வேண்டும்.
- அதில், கையொப்பமிட விரும்பும் வேட்பாளர்கள், அல்லது அவர்களது வாக்குச் சாவடி முகவர்களின் கையொப்பம் பெறப்பட வேண்டும்.
- தாள் முத்திரையின் வரிசை எண்ணைக் குறித்துக் கொள்ள முகவர்களை அனுமதிக்கலாம்.


- வாக்குப் பதிவிற்கு எப்போதெல்லாம் பச்சைத்தாள் முத்திரைகள் அல்லது ரிசர்வில் வைக்கப்பட்டுள்ள ‘Strip’ முத்திரைகள் பயன்படுத்தபடுகிறதோ, அப்போது வாக்குச் சாவடி தலைமை அலுவலரின் குறிப்பேட்டில் அதற்கான காரணம் மற்றும் நேரத்தைக் குறிக்க வேண்டும். மேலும், பார்வையாளர் குறிப்பேட்டில் பதிவு செய்யும் அலுவலர்களுக்கும் இதனை தெரியப்படுத்த வேண்டும்.

# கட்டுப்பாட்டு கருவி முத்திரையிடுதடல்





**Insert the Green Paper seal in the frames provided for both Result**

# ஒத்திகை வாக்குப்பதிவு முடிந்தபின் கட்டுப்பாட்டு கருவியை மூடி முத்திரையிடுதல்




**Close the Result Section inner compartment door with the Green paper seal protruding outside**

# ஒத்திகை வாக்குப்பதிவு முடிந்தபின் கட்டுப்பாட்டு கருவியை மூடி முத்திரையிடுதல்




# கட்டுப்பாட்டு கருவியை மூடி முத்திரையிடுதல்




Close the Result Section door such that the Green paper seal protrudes outside and Seal the door along with the Address tags

# கட்டுப்பாட்டு கருவியை மூடி முத்திரையிடுதல்




**Keep the Strip Seal with pre-gummed portion ‘A’ near the base of the Green Paper Seal protruding from the lower end of the door.**


**Remove the wax paper covering ‘A’ and paste the lower layer of Green Paper Seal.**

# கட்டுப்பாட்டு கருவியை மூடி முத்திரையிடுதல்





**Remove wax paper covering ‘B’ and paste it above the upper layer of the Green Paper Seal.**

# கட்டுப்பாட்டு கருவியை மூடி முத்திரையிடுதல்




**After pasting 'B', the pre-gummed portion 'C' will be on top. Remove wax paper over 'C'**

# கட்டுப்பாட்டு கருவியை மூடி முத்திரையிடுதல்




**Press both the layers of Green Paper Seal protruding from the top and paste the upper layer by pressing it on 'C'**

# கட்டுப்பாட்டு கருவியை மூடி முத்திரையிடுதல்




**Wrap the Strip Seal round the Control Unit from left side just (anti-clockwise) below the CLOSE button window**

# கட்டுப்பாட்டு கருவியை மூடி முத்திரையிடுதல்




**Now the Strip Seal is finally fixed.**
**Note that the Strip seal does not cover CLOSE button Flap.**

# சிறப்புத் தாளைக்கொண்டு முத்திரையிடுதல்

- கட்டுப்பாட்டு கருவியில் உள்ள வாக்குப்பதிவு பிரிவின் முடிவு உட்பக்க கதவினை *சிறப்பு டாக்* கொண்டு முத்திரையிடவும். நீங்கள் அதில் கையெழுத்து இட்டு, வேட்பாளர்களையோ அவர்களது முகவர்களையோ கையெழுத்திட கூறலாம்.
- சிறப்பு டாகின் முன் பகுதியில் கட்டுப்பாட்டு கருவியின் அடையாள எண்ணை எழுத வேண்டும்.
- வாக்குப்பதிவு துவங்கும் முன்னர், சிறப்பு டாகில் அச்சிடப்பட்ட வரிசை எண்ணை நிங்கள் அளிக்க வேண்டிய Declaration ஐ குறிக்க வேண்டும்.

# சிறப்புத் தாளைக்கொண்டு முத்திரையிடுதல்

- கட்டுப்பாட்டுக் கருவியின் வாக்குப் பதிவு முடிவுப் பிரிவு பகுதியின் வெளிப்புற உறையை மூடி முத்திரையிடவும். பிறகு முகவரி டாக் (Tag) ஐ உறுதியாக இணைக்கவும்.

- கட்டுப்பாட்டுக் கருவியை வெளிப்புறமிருந்து ஒட்டு முத்திரையைக் கொண்டு முத்திரையிடவும்.

- கட்டுப்பாட்டுக் கருவியின் வாக்குப் பதிவு முடிவுப் பிரிவின் வெளிப்புற உறையின் மீது தங்களது முத்திரைகளை இட வாக்குச் சாவடி முகவர்களை அனுமதிக்கவும்.

# வாக்குப்பதிவு இயந்திரம் – வாக்குச்சாவடியில் நிறுவுதல்

- வாக்குப்பதிவுக் கருவியை வாக்குப்பதிவு அடைப்புப் பகுதிக்கு உள்ளே வைக்கவும்

- கட்டுப்பாட்டுக் கருவியை உங்களது மேசை மீதோ அல்லது மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலரின் மேசை மீதோ வைக்கவும்.

- வாக்குப்பதிவு கருவியையும், கட்டுப்பாட்டுக் கருவியையும் இணைக்கும் மின் கம்பி (inter-connecting cable) வாக்குச் சாவடிக்குள், வாக்காளர்களின் நடமாட்டத்திற்குத் தடையாக இருக்கக்கூடாது. மற்றும் அது காலால் மிதி படவோ கால் இடறும் வகையிலோ இருத்தல் கூடாது. ஆனால், மின் கம்பியின் முழு நீளமும் நான்கு தெரியும்படி இருக்க வேண்டும்; எந்த சூழ்நிலையிலும் துணியால் மூடவோ அல்லது மேசைக்கடியிலோ இருத்தல் கூடாது.

## வாக்குப்பதிவு இயந்திரம் – வாக்குச்சாவடியில் நிறுவுதல்...

- கீழ் அடைப்பானை திறந்து, மின் ஸ்விச்சை ஆன் செய்யவும்

- கட்டுப்பாட்டு கருவியின் கீழ் அடைப்பானை மூடவும்

- உண்மையான வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் முன்னர் வாக்குப்பதிவாகாமல் இருப்பதை உறுதி செய்ய Total பட்டனை அழுத்தவும்

# வாக்குச் சாவடியில் மின்னணுவாக்குப் பதிவு இயந்திரம் அமைத்தல்

**Place the Balloting Unit in the Voting compartment and the Control Unit on the table of the Presiding/ Polling Officer**

**Connect Balloting Unit to Control Unit.**
***Take care to place the Cable in such a way that voters are not required to cross over it***

**Open the bottom compartment and Switch ON power**

**Close the bottom compartment of the Control Unit**

- வாக்காளார் பட்டியல் நகலில், அஞ்சல் வாக்குச் சீட்டுகள் பற்றிய குறியீடு நீங்கலாக, பிற குறியீடுகள் எதுவுமில்லை என்பதை வாக்குச்சாவடி முகவர்களுக்கு காண்பிக்கவும்.

- வாக்காளர் பதிவேட்டில் (படிவம் 17 A) யாதொரு பதிவும் ஏற்கனவே செய்யப்படவில்லை எனவும் காண்பிக்கவும்.

- வாக்குப்பதிவு தொடங்குமுன் உறுதி மொழியை படித்துக் காட்டி, அதில் கையெழுத்திடவும்.

# 6. தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகள்

# வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் உறுதிமொழி

- அலுவலர்களுக்கான கையேட்டில் இணைப்பு VII பாகம் 1–இல் குறிப்பிட்டுள்ள உறுதி மொழியை நீங்கள் படித்துக்கூற வேண்டும். வாக்குப்பதிவு இயந்திரங்களை இயக்கிக் காட்டுதல், வாக்காளர் பட்டியல் குறியீட்டு நகலையும், வாக்காளர் பதிவேட்டையும் காட்டுதல், பச்சைநிற முத்திரைத் தாளில் வேட்பாளர் வாக்குச்சாவடி முகவர்களின் கையெழுத்தைப் பெறுதல், வாக்குப் பதிவு இயந்திரத்தின் வரிசை எண்ணைக் குறித்துக் கொள்ள முகவர்களுக்கு அனுமதியளித்தல். போன்றவை தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெற உதவும்.

# வாக்குச் சாவடி தலைமை அலுவலரின் உறுதிமொழி...

- வாக்களிப்பு இரகசியத்தைக் காத்திடல் குறித்து 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 128–ஆவது பிரிவின் விதித்துறையினைப் படித்துக் காட்டிய பின், மேற்சொன்ன உறுதிமொழியைப் படித்துக் காட்ட வேண்டும்.

- இந்த உறுதி மொழியை வாக்குச் சாவடியில் வந்திருக்கும் அனைவரும் கேட்குமாறு உரக்கப்படிக்க வேண்டும். மேலும் அந்த உறுதிமொழியில் நீங்கள் கையொப்பமிடுவதுடன், வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்களில் கையொப்பத்தை பெற வேண்டும். கையொப்பமிட மறுத்திடும் வாக்குச்சாவடி முகவர்களின் பெயர்களையும் அதில் பதிந்து நீங்கள் கையொப்பமிட வேண்டும்.

# புதிய வாக்குப்பதிவு இயந்திரத்தினைப் பயன்படுத்தும் போதும், வாக்குப்பதிவு முடிந்தவுடனும் படிக்க வேண்டிய உறுதிமொழி

- வாக்குப்பதிவு நடைபெறும்போது *புதிய வாக்குப்பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்துவது இன்றியமையாது போனால்* நீங்கள் மறுபடியும் **mock** வாக்குப் பதிவையும், அதற்கான சான்றிதழையும் அளிக்க வேண்டும். இணைப்பு VII இன் பாகம் II–இல் வரையறுக்கப்பட்டுள்ளன *மற்றும் ஓர் உறுதி மொழியை மறுபடியும் நீங்கள் படித்துக் காட்ட வேண்டும்*

- (வாக்குப்பதிவின் முடிவில் இதே முறையில் இணைப்பு VII–இல் பாகம் III–இல் உள்ள *மற்றும் ஓர் உறுதிமொழியையும் நீங்கள் படித்துக்காட்ட வேண்டும்)*

- இந்த உறுதிமொழியை ஒரு தனி உறையில் வைத்து வாக்குப்பதிவின் முடிவில் வாக்குச்சீட்டு கணக்கு, தாள் முத்திரை கணக்கு படிவம் 17 C ஆகியவற்றுடன் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

# 7. வாக்குப்திவு தொடங்குதல்

# வாக்குப்பதிவு தொடங்கும் முன் கவனிக்கப்பட வேண்டியவை

**Commencement of Poll at appointed time**

**Warning about Secrecy of vote**

**Precaution for indelible ink**

**Demonstrate marked copy of Electoral Roll to Polling Agents**

**Showing Register of Votes in Form 17 A to Polling Agents**

**Entry of Voters to Polling Station**

If delay in polling, entry in PrOs Diary

Declaration before commencement of poll to be signed by PrO & polling agents

# வாக்குப்பதிவின் தொடக்கம்

- வாக்குப்பதிவு குறிப்பிட்ட நேரத்தில் தொடங்க வேண்டும்
- உங்களது முன்னேற்பாடுகள் அதற்கு முன்னரே முடிவடைந்திருக்கவேண்டும்
- ஏதேனும் எதிர்பாராத காரணங்களுக்காக வாக்குப்பதிவு குறிப்பிட்ட நேரத்தில் தொடங்காமல் இருந்தால் தாமதத்துக்கான காரணங்களை வாக்குச்சாவடி தலைமை அலுவலர் நாட்குறிப்பில் குறிப்பிட வேண்டும்

# வாக்களிப்பின் ரகசியம் பற்றிய எச்சரிக்கை

- வாக்குப்பதிவு தொடங்கும் முன்பு, வாக்குச்சாவடியில் உள்ள வேட்பாளர்களிடமோ அல்லது அவர்களது முகவர்களிடமோ, சட்டத்தின் 128–ம் பிரிவு (இணைப்பு–1) இல் உள்ளவாறு ***வாக்களிப்பின் ரகசியம் காக்க வேண்டியது*** குறித்த அவர்களது கடமை மற்றும் அதனை மீறுவதால் பெறும் தண்டனை குறித்தும் விளக்கவேண்டும்

- வாக்களிப்பின் ரகசியம் காக்கவேண்டியதின் அவசியம் கருதி, வாக்குச்சாவடியில் ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட நபர்கள் தவிர வேறு எவரும் புகைப்படம் எடுக்கவோ வீடியோ எடுக்கவோ அனுமதிக்கப்படக்கூடாது என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

- கடந்த காலத்தில் சில அரசியல் பிரமுகர்கள், தாங்கள் வாக்களித்ததை பிறரிடம் காண்பித்து, வாக்களிப்பின் ரகசிய காப்பீட்டை மீறியுள்ளனர். இது இந்திய தேர்தல் ஆணையத்தின் கோட்பாடுகளுக்கு முரண் ஆனது (தேர்தல் ஆணைய 19.1.2009 நாளிட்ட கடிதம்)

# அழியாத மை குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- அழியாத மைக்குப் பொறுப்பான வாக்குப்பதிவு அலுவலரிடம் வாக்குப்பதிவு நடைபெறும் போது அழியாத மை அடங்கியுள்ள குப்பியை பத்திரமாக வைத்துக்கொள்ளவும், வாக்குப்பதிவின் போது எங்காவது மை கொட்டிவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.
- அதற்கென, சிறிதளவு மண் எடுத்து அதற்கான கொடுக்கப்பட்டுள்ள கிண்ணத்திலோ அல்லது காலி டின் அல்லது அகலமான அடிப்பாகம் கொண்ட பாத்திரம் ஆகிய ஏதேனும் ஒன்றில் அம்மண்ணின் மீது பாகம் மைக்குப்பி புதைந்திருக்குமாறு வைத்து பார்த்துக்கொள்ள வேண்டும்.

# அழியாத மை குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள். . . .

- அத்துடன், வாக்காளரின் சுட்டுவிரலில் மைக்குறியீடு செய்யும் நேரம் தவிர மற்ற நேரங்களில் பிளாஸ்டிக் குச்சி, மைக்குப்பியின் உள்ளேயே இருக்கவேண்டும்.

- பிளாஸ்டிக் குச்சியான குறியிடும் பகுதி நேராகக் கீழ்பாகத்தில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அழியாத மை குச்சி வழியாக வடிந்து பயன்படுத்தும் நபரின் கையில் பட்டுவிடும் வாய்ப்புண்டு.

# வாக்காளர் பட்டியிலின் குறியிடப்பட்ட நகல்

- வாக்குப்பதிவு தொடங்கும் முன், வேட்பாளர்களிடமோ அல்லது அவர்களது முகவர்களிடமோ, *வாக்காளர் பட்டியலின் குறியிடப்பட்ட* நகலில் **Postal Ballot Paper,** மற்றும் (**Service Voters** தவிர வேறு ஏதேனம் குறிப்புகள் இல்லை என்றும், வரைவு வாக்காளர் பட்டியலின் இணைப்பு, விண்ணப்பங்கள் மற்றும் எதிப்புரைகள் பெற்ற பின்னர் வெளியிடப்பட்ட *இறுதிப்பட்டியல் (**Supplementary roll & final rolls**) ஆகியவற்றில் நீக்கம் செய்யப்பட்ட பெயர்கள்* தற்போது அச்சிடப்பட்டுள்ள 'மூல வாக்காளர் பட்டியலிலும்' குறிப்பிட்ட வாக்காளரின் விவரங்களடங்கிய பகுதியில் *'நீக்கம்'* (**deleted**) என்ற வார்த்தை இடம் பெற்றுள்ளது என்பதனை எடுத்துக் கூறவேண்டும்.

# வாக்காளர் பதிவேடு (படிவம் 17 A)

- வாக்குச்சாவடியிலுள்ள வேட்பாளர்களிடமோ அல்லது அவர்களது முகவர்களிடமோ *படிவம் 17 A இல் உள்ள வாக்காளர் பதிவேட்டில்* எந்த வாக்காளர் குறித்தும் எப்பதிவும் இல்லை என்பதை காண்பிக்கவேண்டும்

# வாக்குச்சாவடியில் வாக்காளர்கள் நுழைவதை முறைப்படுத்துதல்

- ஆண் வாக்காளர்களுக்கும், பெண் வாக்காளர்களுக்கும் தனித்தனி வரிசை இருக்கவேண்டும். அத்துடன் ஒரே சமயத்தில் 3 அல்லது 4 நபர் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படவேண்டும்.

- வாக்குச் சாவடிக்குள் ஆண் மற்றும் பெண் என மாறி மாறி அனுமதிக்கப்படவேண்டும்.

- உடற்குறையாடுள்ள மற்றும் கையில் குழந்தைகளை கொண்டுவரும் பெண் வாக்காளர்களுக்கு மற்ற வாக்காளர்களைக் காட்டிலும் வரிசையில் முன்னுரிமை அளிக்கலாம்.

# வாக்குச்சாவடியில் வாக்காளர்கள் நுழைவதை முறைப்படுத்துதல் . . . .

- ஊடல் ஊனமுற்ற வாக்காளர்களை வரிசையில் நிற்கவைக்காமல் வாக்குச்சாவடியில் அனுமதிப்பதில் முன்னுரிமை அளிப்பதுடன், அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அவர்கள் பெறுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

- தேவை ஏற்படின், அத்தகைய வாக்காளர்களுக்கு தனியே ஒரு வரிசை அமைக்கலாம்.

# வாக்குச்சாவடியில் வாக்காளர்கள் நுழைவதை முறைப்படுத்துதல் . . . .

- அத்தகைய ஊடல் ஊனமுற்ற வாக்காளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தருவதுடன், அவர்கள் தங்களது சக்கர நாற்காலியில் வாக்குச்சாவடியில் நுழைய அனுமதிக்கலாம்.

- உங்களது வாக்குச்சாவடியில், *நிரந்தர சாய்தளம்* **(Ramp)** ஏற்படுத்தப்படாமல் இருந்தால், தற்காலிகமாக மரப்பலகையிலான சாய்தளம் அமைத்துத் தரவேண்டும்.

- உடல் ஊனமுற்ற வாக்காளர்களைப் போலவே, செவித்திறன் குறைவுற்ற மற்றும் பார்வையற்ற வாக்காளர்களுக்கும் உரிய சிறப்புக் கவனம் அளிக்கப்படவேண்டும்.

# வாக்குச்சாவடியின் உள்ளே அனுமதிக்கக்கூடிய நபர்கள்

(அ). வாக்காளர்கள்

(ஆ). வாக்குப்பதிவு அலுவலர்கள்

(இ). வேட்பாளர்கள், அவர்களது தேர்தல் முகவர்கள் மற்றும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் வாக்குச்சாவடி முகவர் ஒருவர்.

(ஈ). வாக்குச் சாவடியில் நுழைய தேர்தல் ஆணையத்திடம் அனுமதிச் சீட்டு பெற்ற நபர்கள் அதாவது பத்திரிக்கை/தொலைகாட்சி நபர்கள்.

(உ). தேர்தல் பணியிலுள்ள அரசுப்பணியாளர்.

(ஊ). வாக்காளருடன் வரும் அவர் கையிலுள்ள குழந்தை

(எ). கண்பார்வையற்ற மற்றும் பிறர் உதவியின்றி நடக்க அல்லது வாக்களிக்க இயலாத நலிவுற்ற வாக்காளர்களுடன் உதவிக்கு வரும் நபர்.

(ஏ).வாக்காளர்களை அடையாளம் காண்பிக்கவும் மற்றும் வாக்குப்பதிவின் போது வாக்காளர்களுக்கு உதவ உடன் வரும் நபர்களையும் அனுமதிக்கலாம்.

# வாக்குச்சாவடியின் உள்ளே அனுமதிக்கக்கூடிய நபர்கள் . . .

- கண்பார்வையற்ற மற்றும் நலிவுற்ற வாக்காளர்களுக்கு உதவிசெய்ய வாக்குச்சாவடி தலைமை அலுவலரால் அனுமதிக்கப்படும் நபர்கள் தவிர வேறு எவரும் வாக்குப்பதிவு மறைவுப் பகுதிக்குள் நுழையக்கூடாது.

- தேர்தல் ஆணையத்தின் அதிகாரக் கடிதம் பெற்ற பத்திரிக்கை / தொலைகாட்சி நபர்கள் வாக்குச்சாவடியில் நுழைய வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அனுமதிக்கலாம். இருப்பினும், வாக்களிப்பின் இரகசியத்தன்மையை பாதிக்கும் நோக்குடன் வாக்காளர், வாக்குப்பதிவு செய்வதை புகைப்படம் எடுக்கக்கூடாது.

- தேர்தல் ஆணையத்தின் அதிகாரம் பெற்றவர்களைத் தவிர வேறு எவ்விதமான புகைப்படம்/வீடியோ எடுப்பதை அனுமதிக்கக்கூடாது.

# வாக்குச்சாவடியின் உள்ளே அனுமதிக்கக்கூடிய நபர்கள் . . .

- தேர்தல் பார்வையாளர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் மண்டல அலுவலர்கள் ஒவ்வொருமுறை வாக்குச்சாவடியை பார்வையிடவரும் போது பார்வையாளர் பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யவேண்டும்.

- தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள பார்வையாளருக்கு உரிய மதிப்பும் மரியாதையும் அளிப்பதுடன் அவர் கேட்கும் தகவல்களை தவறாது அளிக்கவேண்டும்.

- அனுமதி பெறாத எந்த நபரும் வாக்குச்சாவடியில் நுழையக்கூடாது.

# வாக்குச்சாவடியின் உள்ளே அனுமதிக்கக்கூடிய நபர்கள். . .

- **வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் உத்தரவின்பேரில் மட்டுமே காவலர் (Police) வாக்குச்சாவடியில் நுழைய வேண்டும், அவர் கூறிய பணியை முடித்தவுடன் வெளியேற வேண்டும்.**
- **மத்திய காவல் படையை சேர்ந்த காவலர், வாக்குச்சாவடியில் நடைபெறும் நிகழ்வுகளைப் பார்க்கும் வண்ணம் வாக்குச்சாவடியின் வாசலில் இருக்கவேண்டும்.**
- ***தேர்தல் பணியாளரோ அல்லது தேர்தல் முகவர்களோ எந்த வாக்காளரும் வாக்குச்சாவடியில் இல்லாதபோது வாக்களிக்க முயற்சிக்கக்கூடாது.***
- **எந்த வாக்குப்பதிவு அலுவலரும், வாக்காளருடன் வாக்குப்பதிவு மறைவுப் பகுதிக்குச் செல்லக்கூடாது.**

# VISIT SHEET

Day of poll ____________________

Name and Number of Assembly: ____________________

Name and Number of Polling Station: ____________________

Number of Electors: ____________________

| Sl. No. | Name & Designation of the officer visiting (Observer/DEO/RO/ ERO/Sector Magistrate/ Zonal Magistrate/ Patrolling Magistrate | Time of Visit | Brief description of polling process (Peaceful/ Incidents, if any) | Number of votes polled till the time of visit | % polled till the time of visit | Remarks, If any | Signature |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

# 8. வாக்குச்சாவடியின் உட்புறம் மற்றும் அருகாமையில் தேர்தல் விதிகளைச் செயல்படுத்துதல்

# வேட்பாளரின் தேர்தல் பூத் (Booth)

- வாக்குச்சாவடி மற்றும் அதனைச் சுற்றி உள்ள 200 மீட்டர் அளவுள்ள பகுதி, வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

- வாக்காளர் உதவி மையம் (voter facilitation counters) அல்லது அரசியல் கட்சிகளின் பந்தல் வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்கு அப்பால் அமையுமாறும், இரு நபர்கள் மட்டுமே அங்கு இருக்கவேண்டும் என்பதையும் வாக்குச்சாவடி முகவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

- ஏந்தவொரு அரசியல் கட்சியின் பிரதிநிதியையும் வாக்குச் சாவடியின் 200 மீட்டர் தொலைவிற்குள் உட்கார அனுமதிக்கக் கூடாது.

# வேட்பாளரின் தேர்தல் பூத் . . .

- **வாக்காளர்கள் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் இருந்து கண்டுபிடிக்க உதவியாக வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவில் போட்டியிடும் வேட்பாளர்கள்** ***தேர்தல் பூத் அமைத்துக்கொள்ள அனுமதிக்கலாம்.***

- **வேட்பாளர்கள், தங்களது முகவர்களுக்காக,** ***வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர்*** **தொலைவில் ஒரு மேசை மற்றும் 2 நாற்காலிகள் மற்றும் மழை/வெயில் ஆகியவற்றிலிருந்த பாதுகாத்துக்கொள்ள ஒரு குடை அல்லது தார்பாலினாலான சிறிய கூரை அமைத்து, வாக்காளர்களுக்கு அலுவல்காரா அடையாளச் சீட்டு (Unofficial Identity Slips) வழங்க அனுமதிக்கலாம். எனினும், அப்பூத்தில் உள்ள மேசையைச் சுற்றிலும் கூட்டமாக இருக்கக்கூடாது.**

- ***அரசியல் கட்சிகளால் வழங்கப்படும் அடையாளச்சீட்டு வெள்ளை நிறத்தில் இருக்கவேண்டும். அவற்றில் ஏதேனும் சின்னமோ அல்லது அரசியல் வசனங்களோ இருக்கக்கூடாது.***

# தேர்தல் பூத்திலுள்ள நபர்கள்

- அரசியல் கட்சிகளினால் பூத்தில் பணிபுரிய நியமிக்கப்படும் நபர்கள் அவ்வாக்குச்சாவடிக்குட்பட்ட பகுதியில் வாக்காளராக இருப்பதோடு வாக்காளர் அடையாள அட்டை வைத்திருக்கவேண்டும். அத்துடன் தேர்தல் பார்வையாளர்கள்/செக்டார் மாஜிஸ்திரேட் கேட்கும்போது தங்கள் வாக்காளர் அடையாள அட்டையைக் காண்பிக்கவேண்டும்.

- அரசியல் கட்சிகள்/வேட்பாளர்கள், கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்களை பூத்களில் நியமிக்கக்கூடாது.

- உள்ளூர் காவல்துறையினர் அத்தகைய நபர்களைக் கண்காணிக்க வேண்டும்

(இந்திய தேர்தல் ஆணையத்தின் 16.1.09 தேதியிட்ட கடிதம்).

# பிரச்சாரம் செய்யத் தடை

- வாக்குச்சாவடியிலிருந்து 100 மீட்டருக்கு உட்பட்ட பகுதியில் பிரச்சாரம் செய்வது தேர்தல் விதிகளின் படி குற்றமாகும்.

- அத்தகைய குற்றச்செயலில் ஈடுபடும் நபரை பிடியாணையின்றி கைது செய்ய காவல் துறைக்கு அதிகாரமுண்டு என்பதுடன், 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 130–ன் கீழ் அந்நபர் மீது வழக்கு தொடரலாம். (இணைப்பு–I)

- வாக்காளர்களை வாகனங்களில் அழைத்துச் செல்வதும், வாக்குச்சாவடியில் 100 மீட்டருக்குட்பட்ட பகுதியில் பிரச்சாரம் செய்வதும் குற்றமாகும். தனியார் வாகனங்கள் வாக்குச்சாவடியிலிருந்து 100 மீட்டர் தொலைவிற்கு அப்பால் நிறுத்தப்படவேண்டும்.

# பிரச்சாரம் செய்யத் தடை

- வாக்குச் சாவடியில் புகைபிடிப்பது தடைச்செய்யப்பட்டுள்ளது.
- வாக்குச் சாவடியிலுள்ளோ அல்லது வெளிப்புறத்திலோ வாக்காளர்களையோ முகவர்களையோ அச்சுறுத்துவது சட்டப்படி குற்றமாகும். இப்படி ஏதேனும் நிகழ்ந்தால் உடனே காவல் துறையில் புகார் செய்யவேண்டும்.
- மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் ஆணையத்தின் விதிமுறை மீறப்படுவது உங்கள் கவனத்திற்கு வரும்போது, நீங்கள் உடனடியாக, செக்டார் மாஜிஸ்திரேட்டிடமோ அல்லது வாக்குச்சாவடி பகுதியில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான பொறுப்பான அலுவலர்களிடமோ புகார் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோர வேண்டும்.

# வாக்குச்சாவடியினுள்ளும் அருகிலும் நடைபெறும் முறையற்ற செயல்கள்

- 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (இணைப்பு–1) பிரிவு 131 இல் உள்ள விதிகளை செயல்படுத்தப்படவேண்டும். (இணைப்பு–1)
- யாரேனும் முறையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவாராயின், நீங்கள் உடனே காவல் துறையினர் மூலம் அவரைக் கைது செய்து வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கலாம்.
- இத்தகைய முறையற்ற செயல்களை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க காவல் துறைக்கு அதிகாரமுண்டு.
- மைக் மற்றும் ஒலிபெருக்கி பயன்பாடு வாக்குச்சாவடியின் பணிகளுக்கு இடையூறாக இருந்தால், அதனை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

## பிரச்சனைக்குரிய நபர்களை அப்புறப்படுத்துதல்

- முறையற்ற செயல்களில் ஈடுபடும் அல்லது சட்டபூர்வ நடவடிக்கைகளுக்கு கீழ்ப்படியாமல் இருக்கும் நபர்களை, உங்கள் உத்தரவின் பேரில் காவல்துறையினர் மூலமாகவோ அல்லது உங்களால் அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் மூலமாகவோ வாக்குச்சாவடியிலிருந்து அப்புறப்படுத்தலாம்.

(1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 132 – இணைப்பு–1 காண்க)

# வாக்காளர்கள் பயணம் செய்ய வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவது

- வாக்காளர்களை, வீட்டிலிருந்து *சட்டத்திற்கு புறம்பாக வாக்குச்சாவடிக்கு வாகனங்களில் அழைத்து வருவது* மற்றும் திருப்பி அழைத்துச்செல்வது குறித்த புகார் தங்களிடம் வருமானால், புகார் செய்யும் நபரிடம் தாங்கள், குற்றம் செய்த நபர் மீது 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 133 –இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் அல்லது அக்காரணத்தை பயன்படுத்தி உரிய காலத்தில் வேட்பாளர் மீது தேர்தல் வழக்கு பதிவு செய்யக் கேட்டுக்கொள்ளலாம்.

- நீங்கள் பெற்ற புகார் மனு மீது உங்களின் குறிப்பினை எழுதி சம்பந்தப்பட்ட உட்கோட்ட அல்லது சம்பந்தப்பட்ட மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்ப வேண்டும்.

- மண்டல/செக்டார் மாஜிஸ்திரேட் உங்கள் வாக்குச்சாவடிக்கு வரும் போது மேற்காணும் புகார் மனு பற்றி தெரிவிக்க வேண்டும்.

# வாக்குச்சாவடியிலிருந்து மின்னனு இயந்திரத்தை எடுத்துச்செல்லும் குற்றம்

- யாரேனும், தேர்தலின் போது முறைகேடாகவோ அல்லது முன்னனுமதி பெறாமலோ மின்னனு இயந்திரத்தை, வாக்குச்சாவடியிலிருந்து எடுத்துச் செல்லவோ அல்லது அதற்கான முயற்சிகளில் ஈடபடுவராயின் அல்லது வேண்டுமென்றே அத்தகைய குற்ற நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்தால், கவனத்தில் கொள்ளத்தக்க குற்றத்தில் (cognizable offence-ல்) ஈடுபட்டவராகக் கருதப்பட்டு, ஓராண்டு வரை சிறைத்தண்டனையோ அல்லது ரூ.500/— அபராதமாகவோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனை பெறக்கூடியவராகிறார்.

(1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 135 மற்றும் பிரிவு 61 A க்கான விளக்கம்)

# தேர்தல் அலுவலர் தம் கடமையிலிருந்து தவறுவது

- 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 134 இன் கீழ், எந்தவொரு வாக்குச்சாவடி தலைமை அலுவலரோ அல்லது வாக்குப்பதிவு அலுவலரோ, தகுந்த காரணமின்றி தம் கடமையிலிருந்து தவறி, சட்டத்துக்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டால், அவர் கவனத்தில் கொள்ளத்தக்க குற்றம் புரிந்தவராக (cognizable offence) கருதப்படுவார் என்பது தங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

- **1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் யாரும் (தேர்தல் நடத்தும் அலுவலர், வாக்குச்சாவடி தலைமை அலுவலர், காவல்துறை அதிகாரி அல்லது வாக்குச்சாவடியில் சட்டம் ஒழுங்கினைக் காக்க நியமிக்கப்பட்ட நபர்கள் தவிர) தேர்தல் நாளன்று, 1959 ஆம் ஆண்டு ஆயுதச்சட்டத்தில் கூறியுள்ள ஆயுதங்கள் எவற்றையும் வாக்குச்சாவடி அருகில் எடுத்துச்செல்லக்கூடாது.**

- **யாரேனும் இச்சட்டத்தை மீறினால், இரண்டாண்டுவரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்த தண்டனை பெறத்தக்கவர் ஆவார். இக்குற்றம் கவனத்தில் கொள்ளத்தக்க குற்றமாகும்(cognizable offence).**

# வாக்குச்சாவடியில் செல்போன், கார்டுலெஸ் போன், வயர்லெஸ் செட் பயன்படுத்தத் தடை

- வாக்குச்சாவடியிலுள்ள மற்றும் வாக்குச்சாவடியிலிருந்த 100 மீட்டர் தொலைவுக்குட்பட்ட பகுதியில் செல்போன், கார்டுலெஸ் போன், வயர்லெஸ் செட் பயன்படுத்தக் கூடாது.

# 9. வாக்காளர்களை அடையாளம் காணுதல் மற்றும் எதிர்க்கப்பட்ட வாக்குகள் பற்றிய நடைமுறைகள்

# வாக்காளரின் அடையாளத்தைச் சரிபார்த்தல்

- **உரிய ஆவணங்கள் மூலம் வாக்காளர்களை அடையாளம் காண்பது தேர்தல் ஆணையத்தால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.**

- **வாக்காளர்கள் தங்களது *அடையாளத்தை நிரூபிக்க வாக்காளர் அடையாள அட்டை or official voter slip காண்பிக்கவேண்டும்***

- **புகைப்பட வாக்காளர் பட்டியலிலுள்ள புகைப்படத்தைக் கொண்டும் வாக்காளரை அடையாளம் காணலாம்.**

# அலுவல் அடையாளச் சீட்டு

- இந்தியத் தேர்தல் ஆணையர் அலுவல் அடையாளச் சீட்டு அரசு/தேர்தல் அதிகாரிகள் மூலமாக விநியோகம் செய்திட உத்தரவிட்டுள்ளது.
  - தேர்தல் நடப்பதற்கு 8–10 நாட்களுக்கு முன் விநியோகம் செய்யப்படும்.
- வாக்குப் பதிவு அலுவலரால் வாழங்கப்பட்டு, வாக்குச்சாவடி அலுவலரால் விநியோகம் செய்யப்பட்ட அலுவல் அடையாளச் சீட்டினை ஒட்டளிக்கும் அடையாளச் சான்றாகப் பயன்படுத்தலாம்.
- வாக்காளர் EPIC அட்டை/அரசால் வழங்கப்பட்ட அடையாளச் சீட்டினை வாக்குச்சாவடிக்கு எடுத்து வரலாம்.

# வாக்காளரின் அடையாளத்தைச் சரிபார்த்தல். . . .

- *வாக்காளர் குறித்த விவரங்களை மூல வாக்காளர் பட்டியல் துணைப்பட்டியல்கள்* ,ஒன்று அல்லது இரண்டு மற்றும் புகைப்பட சரிபார்ப்புத் தாள் ஆகியவற்றுடன் சரிபார்ப்பது அவசியமானது.

# வாக்காளரின் அடையாளத்தைச் சரிபார்த்தல். . . .

- வாக்காளர் அடையாளத்தைக் கண்டறியும் பொறுப்புடைய வாக்குப்பதிவு அலுவலர், முதலில் வாக்காளர் அடையாள அட்டை மூலமாக வாக்காளர் அடையாளத்தை தன் திருப்திக்கேற்ப சரிபார்க்க வேண்டும். அவருக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால், வாக்காளரை உங்கள் முன்பு வரச்சொல்லி சரிபார்க்கவும்.

- நீங்கள் உங்கள் திருப்திக்கேற்ப மேலும் விசாரித்து வாக்காளரின் அடையாளத்தைச் சரிபார்க்க வேண்டும்.

- ஆள்மாறாட்டம் செய்யும் நபர்களை நீங்கள் உடனடியாக எழுத்து மூலம் புகார் செய்து காவல்துறையிடம் ஒப்படைக்கலாம்.

# வாக்காளரின் அடையாளத்தைச் சரிபார்த்தல்...

- வாக்காளர் , வேட்பாளர் அல்லது அவரது முகவர்களால் வழங்கப்பட்ட ‘அலுவல் சாரா அடையாளச் சீட்டினை வாக்குச்சாவடிக்கு எடுத்து வருவார். அச்சீட்டு வெள்ளை நிறத்தில் இருப்பதோடு, வாக்காளரின் பெயர், வாக்காளர் பட்டியலில் வரிசை எண், பட்டியல் எண், பகுதி எண் மற்றும் வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடியின் எண் மற்றும் பெயர் போன்ற விவரங்களும் அச்சீட்டில் இடம்பெற்றிருக்கும்.

- அச்சீட்டில், வேட்பாளரின் பெயரோ, அல்லது கட்சியின் பெயரோ சின்னத்தின் அடையாளமோ (பிரச்சாரத்துக்கு ஏதுவாக அடையுமென்பதால்) இடம் பெற்றிருக்கக் கூடாது.

# வாக்காளரின் அடையாளத்தைச் சரிபார்த்தல். . . .

- வாக்குச்சாவடிக்கு வாக்காளர் கொண்டு வரும் அலுவல்சாரா அடையாளச்சீட்டு, வாக்காளர் பட்டியலில் அவர் சம்பந்தப்பட்ட பதிவுகளை எளிதில் கண்டுபிடிக்க மட்டுமே உதவுகிறது.

- வாக்குப்பதிவு அலுவலர் 1, வாக்காளர் கொண்டுவரும் அடையாளச்சீட்டை பெற்று அதில் உள்ள வாக்காளர் பட்டியலின் வரிசை எண்ணை மட்டுமே உரக்க படிக்கவேண்டும். வாக்காளரது பெயர் மற்றும் விவரங்களை படிக்கக் கூடாது.

- அதற்குபின்னர், வாக்குப்பதிவு அலுவலர் வாக்காளரின் பெயர் மற்றும் இதர விவரங்களைக் கேட்டு தெரிந்து கொண்டு, அடையாளச் சீட்டு கொண்டுவரும் நபர் உண்மையான வாக்காளர் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- யாரேனும் ஆள்மாறாட்டம் செய்வதாகக் கண்டறியப்பட்டால் வாக்குச்சாவடி தலைமை அலுவலர், அந்நபரை காவல்துறையினர் வசம் ஒப்படைக்க வேண்டும்.

# வாக்காளர் பட்டியலில் சிறு எழுத்து மற்றும் அச்சுப்பிழைகளைப் பொருட்படுத்த வேண்டாம்

- வாக்காளர் பட்டியல் வாக்காளர் பற்றிய விவரங்கள் சில நேரங்களில் தவறாக அச்சிடப்பட்டிருக்கலாம் அல்லது வாக்காளரின் சரியான வயது குறித்த தகவல்கள் பழமையானதாக இருக்கலாம்.
- வாக்காளரின் அடையாளம் குறித்த வாக்காளர் பட்டியலில் இதர விவரங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில், வெறும் எழுத்துப்பிழை மற்றும் அச்சப்பிழைகளை பொருட்படுத்த வேண்டாம்.

# வாக்காளர் பட்டியலில் சிறு எழுத்து மற்றும் அச்சுப்பிழைகளைப் பொருட்படுத்த வேண்டாம்

## நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது

- அ) வாக்காளரின் புகைப்படம் அவரின் அடையாளத்தோடு பொருந்தும் பட்சத்தில் அவர் பெயர், உறவுமுறை (தந்தை/தாயார்/கணவர்), பாலினம், வயது (2/3 ஆண்டுகள் வரை) அல்லது முகவரி குறித்த சிறிய தவறுகள், வாக்காளர் அடையாள அட்டையில் காணப்பட்டால் அவற்றை கவனத்தில் கொள்ளத் தேவையில்லை.

- ஆ) வாக்காளர் அடையாள அட்டையின் வரிசை எண்ணில் தவறு இருந்தால் கவனத்தில் கொள்ளத் தேவையில்லை.

- இ) மற்றொரு தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டையைக் கொண்டு வந்தாலும் அவர் பெயர் அவ்வாக்குச்சாவடிக்குட்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால், அவரை வாக்களிக்க அனுமதிக்கலாம்.

- வாக்காளர் பட்டியல் ஒரு மொழிக்கு மேல் தயார் செய்யப்படும் போது, வாக்காளரின் பெயர் குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம்பெறாமல் இருந்து, அந்நபரின் பெயர் அப்பகுதிக்கான மற்றொரு மொழியிலுள்ள வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால், அவரை வாக்களிக்க அனுமதிக்கலாம்.

- அவ்வாறு வாக்களித்த வாக்காளரின் பெயருக்கு எதிரே, குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியிலில், மையினால் குறியீடு செய்ய வேண்டும்.

# வாக்காளரின் அடையாளத்தைச் சரிபார்த்தல். . . .

- வாக்காளர் ஓர் இடத்திற்கு மேல் வேறு எந்த வாக்குச்சாவடியிலும் வாக்காளிக்காமல் இருக்கும் பொருட்டு, *அவரது இடது கை சுட்டுவிரலில் அழியாத மைக்குறி ஏதேனும் உள்ளதா என்பதை நன்றாக சரிபார்த்த பின்னர், அழியாத மைக்குறி இட்டு, பின்னர் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.*

# எதிர்க்கப்பட்ட வாக்குகள் (Challenged Votes)

- வாக்குச்சாவடி முகவர்கள், வாக்களிக்க வரும் வாக்காளர்களின் அடையாளம் குறித்து எதிர்ப்பு தெரிவித்தால் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ரூ.2/– தொகையாக உங்களிடம் செலுத்தவேண்டும்.

- நீங்கள் அவரின் எதிர்ப்புகுறித்து முழு விசாரணை நடத்த வேண்டும்.

- விசாரணைக்குப் பின்னர் அவரது எதிர்ப்பு நிருபிக்கப்படவில்லை என்றால், அந்த வாக்காளரை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.

- அவரின் எதிர்ப்பு உண்மையென்று நிருபிக்கப்பட்டால், எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நபரை வாக்களிக்க அனுமதி மறுப்பதோடு, எழுத்து மூலமாக காவல் துறையிடம் புகார் அளித்து அவரை ஒப்படைக்கலாம்.

# எதிர்க்கப்பட்ட வாக்குகள்...

- எதிர்க்கப்பட்ட நபரை, ஆள்மாறாட்டம் செய்வதற்கு கிடைக்கும் தண்டனை குறித்து எச்சரிக்கை செய்து, வாக்காளர் பட்டியலில் அவரது பதிவுகள் முழுவதையும் உரக்க படித்து அவற்றில் குறிப்பிட்ட நபர் அவர்தானா என்பதை அவரிடமே உறுதி செய்யவேண்டும். பின்னர், படிவம் 14 இல் உள்ள எதிர்க்கப்பட்ட வாக்குகள் பட்டியலில் அவரது பெயர் மற்றும் முகவரியினைக் குறிப்பிட்டு அவ்வாக்காளரின் ஒப்பம் அல்லது பெருவிரல் குறியினைப் பெறலாம்.

- அவர் அவ்வாறு செய்ய மறுப்பாராகில், அவரை வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது.

## RECEIPT FOR CHALLENGE FEE

Book No.................... Page No....................

Received a sum of Rs.2 (Rupees two only) in cash from Thiru ....................................

.........................................................................................................................................

candidate / Election Agent / Polling Agent on account of deposit for a challenge under rule 36 of the Conduct of Elections Rules, 1961.

**Date........................** **Signature of Presiding Officer**

**Polling Station No..............................of**

**.........................Assembly Constituency.**

Forfeited to Government.

Presiding Officer.

FORM 14.

**LIST OF CHALLENGED VOTES.**

[See rule 36 (2) (c) of the Conduct of Elections Rules, 1961]

**Election to the Tamil Nadu Legislative Assembly.**

**from the .................................................................Constituency.**

Number and Name of Polling Station ..........................................in Assembly Constituency / Name of Place of Poll ...........................

| Serial Number of entry | Name of elector. | Serial number of | | Signature or thumb impression of the person challenged. | Address of the person challenged. | Name of identifier, if any. | Name of challenger. | Order of Presiding Officer. | Signature of challenger on receiving refund of deposits. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Part of roll | Elector's name in that part | | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | | | | | | | |

Date.....................

Signature of Presiding Officer

# வாக்காளரை வாக்களிக்க அனுமதிக்கும்போது, வாக்காளர் பட்டியலில் குறிப்பது.

- வாக்காளரை வாக்களிக்க அனுமதிக்கும்போது. புகைப்பட வாக்காளர் பட்டியல் குறியீட்டு நகலில் உள்ள கட்டத்தின் *குறுக்கே சிவப்பு மையினால் கோடிட வேண்டும்.*

- ஆண், பெண் வாக்காளர்களை சரிபார்க்க மற்றும் கணக்கிடுவதற்கு வசதியாக, *பெண் வாக்காளர்கள் வாக்களிக்கும்போது அவர்களது வரிசை எண்ணை வட்டமிட்டு குறிக்கலாம்.* **(Rounded off)**


# ஆண் பெண் வாக்காளர் – குறியீட்டு படிவத்தில் குறிக்கும் முறை

- Five Tally sheets to be given to each Polling station
  - For All Voters, 2 sheets for Male voters, 2 for female voters, 1 for others
  - All men PS 3-4 sheets based on voter strength
  - All women PS – 3-4 sheets based on voter strength+ 1 sheet for others.
- Each sheet would have numbers marked from 1 to 500
- To be used by presiding officer to score out voters as and when they come to vote
  – Male, female and others to be marked in separate sheets
- The sheets will be printed by DEO and included in local materials package.

# Sample Tally Sheets

## Male/Female/others (please score out any two)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
